
தமிழரசு
1-10-1992 ரூ.1

விழாக் காலங்களில் விண்மீன் போல்
பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

DIPR/1642/MS/92

அட்டைப்பட விளக்கம்:



# நித்தியத்தின் புன்னகையே நீடூழி நீ வாழ்க!

— கவிஞர் இளந்தேவன்

சத்தியத்தின் ஒளிச்சுடர்நீ
சாந்தத்தின் திருவுருநீ
நித்தியத்தின் புன்னகைநீ
நேசத்தின் வார்ப்படம்நீ

அன்புக்கு விரிவுரைநீ
அகிம்சைக்குப் பொருளுரைநீ
பண்புக்குப் புகலிடம்நீ
பாரதத்தின் உயிர்க்குரல்நீ

பொக்கைவாய்ப் புன்னகையால்
'பொய்' அழிக்கும் போர்வீரா
திக்கிருக்கும் வரையிருப்பாய்!
திசைகடந்தும் புகழ்வளர்ப்பாய்!

## இந்த இதழில்...


பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா... 2
முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா ... 6
தந்தை பெரியாரும் பெண்மையும் ... 9
அந்த வசந்தம் -அறிஞர் அண்ணா ...12
காமராசர் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ...19
ரோமானிய அரும்பொருள் கண்காட்சி ...24
எழுத்தும் தெய்வம், எழுதுகோலும் தெய்வம் ...27
குடிப்பழக்கத்தால் வரும் கேடு (கவிதை)...31
திண்டுக்கல்-அண்ணா மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ...34
விஷச் சாராயத்தால் ஏற்படும் விளைவுகள் ...37
பெரியார் மாவட்டம் ஈரோட்டில் உயிரியல் பூங்கா திறப்பு விழா ...43
பாடநூல் நிறுவனத்தின் பணிகள் ...45



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

புரட்டாசித் திங்கள் - 15

மலர்:23 இதழ்:7

1-10-1992




## பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா

பேரறிஞர் அண்ணா அவர்களின் 84-வது பிறந்தநாள் விழா, தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 15.9.92 அன்று காலை சென்னையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்துகொண்ட இந்தக் கவின்மிகு விழா, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு நிதியமைச்சர், டாக்டர் நாவலர். இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையுரை நிகழ்த்த - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழா மேடை, மலர்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**செய்தித்துறைச் செயலர்**

இவ்விழாவில், செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத்தில் - தமிழகம் வளம்பெற வேண்டும்; முன்னேற வேண்டும்; ஏழைகள் நல்வாழ்வு காணவேண்டும் என்கிற நோக்கத்தோடு ஏழை எளியோருக்கான பல நலத் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்தினார். புகழ்பெற்றார். நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் போலவே தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் வல்லவராகத் திகழ்கிறார்.''

-இதன்பின், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெயஸ்ரீ பாலசந்தர் இ.ஆ.ப., அவர்கள் பொன்னாடை அணிவிக்க - மேடையிலிருந்த மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அவ்வாறே கவுரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்ச்சியையடுத்து - பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்; அப்படம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் தமது வாழ்த்துரையில் தெரிவித்ததாவது:

''அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறந்த நாள் விழாக் காணும் இந்நேரத்தில் அவரது துணைவியாருக்கு நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஐந்து இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்ததை நாம் நினைவில் கொள்ளவேண்டும். மக்கள் நலத்திட்ட உதவிகள், உரியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்று அடிக்கடி புரட்சித் தலைவர் அவர்கள் கூறுவார்; அதைச் செயல்படுத்திவரும் புரட்சித் தலைவிக்கு மக்கள் தமது முழு ஒத்துழைப்பையும் கொடுத்து ஒளிமயமான எதிர்காலம் உருவாக வழிவகுக்கவேண்டும்.''

**கல்வி அமைச்சர்:**

தம்முடைய வாழ்த்துரையின் போது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் இளமைக்கால வாழ்வை நினைவு கூர்ந்தார்; மேலும் அவர் பேசியதாவது;

''சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் கலந்துகொண்ட அண்ணா அவர்கள், அக்கட்சி பணக்காரர் கையிலிருந்து ஏழைகள் கைக்கு மாற வேண்டும் என்றோர் தீர்மானம் கொண்டுவந்து

நிறைவேற்றினார். அத் தீர்மானம் ''அண்ணாதுரை தீர்மானம்'' என்றே அன்றைய தினம் குறிப்பிடப்பட்டது. நாடு நலம்பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலேயே அவர் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டார். இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழிகோலினார். இனி இந்த நாடு சென்னை ராஜதானியல்ல; 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார். ஆங்கிலம்-தமிழ் என்ற இரு மொழிக் கொள்கையைக் கொண்டுவந்தார். அண்ணா வழி நடக்கும் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான இந்த அரசும் இந்திக்கு இடம் தராது.

**சட்டப் பேரவைத் தலைவர்:**

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் பேசியதாவது:

''நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலவாம் அறிஞர் அண்ணாவின் அரசை - அண்ணாவின் புகழ், புரட்சித் தலைவரின் புகழ் பட்டுப்போகா வண்ணம் இன்றைய தினம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நடத்தி வருகிறார். எனவே - அறிஞர் அண்ணாவின் வாரிசாக மட்டுமல்ல; அவரது இதயக் கனியாம் புரட்சித் தலைவரின் வாரிசாகவும் விளங்கிவருபவர் புரட்சித் தலைவி அவர்கள். அதிகாரத்தை நிலைநிறுத்த அல்ல; அண்ணாவின் கொள்கையை, புரட்சித் தலைவரின் கொள்கையை நிலைநிறுத்தவே மாபெரும் மக்கள் சக்தியாம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடத்தி வருகிறார்.

**நிதி அமைச்சர்:**

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சியூட்டியவர் அறிஞர் அண்ணா அவர்கள்; எங்களைப் போன்றவர்களை ஆளாக்கி, ஜனநாயக நெறிமுறைகளை அமல்படுத்தியவரும்கூட. வீழ்ந்துகிடந்த தமிழர்களைக் கல்லடிக்கும், சொல்லடிக்கும் அஞ்சாமல் தலை நிமிரச் செய்த பெருமை தந்தை பெரியார் அவர்களுக்கே உண்டு; அதன்பின் அறிஞர் அண்ணா அவர்களும், அவருக்குப் பிறகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் அப்பெருமையைப் பெற்றிருந்தார்கள்; அவர்கள் மறைவுக்குப் பின்னால், அவர்கள் வாரிசாகச் செயல்பட்டு வருபவர்தான் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள். தமிழ்நாடாம் இந்த நிலத்தைப் பண்படுத்திய பெருமை பெரியாருடையது. இதைப் பயன்தரத் தக்கதாக்கிய பெருமை அண்ணாவினுடையது; இதை உரமுள்ளதாக்கிய பெருமை புரட்சித் தலைவருடையது; அப்படிப்பட்ட தமிழகத்தைப் பூஞ்சோலை ஆக்கிவரும் பெருமை-கனிகுலுங்கும் தோட்டமாக ஆக்கிவரும் பெருமை நம் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களையே சேரும்.''



**முதல்வர் உரையும் நலத்திட்ட உதவிகளும்:**

இதற்கெல்லாம் பிறகு - மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - அறிஞர் அண்ணா அவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

பேச்சுப் போட்டிகளிலும், கட்டுரைப் போட்டிகளிலும் வெற்றிபெற்ற மாணவ-மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறையில் செம்மையுறப் பணியாற்றிய பொறியாளர்களுக்கு 'அண்ணா விருது'கள் அளித்தார்.

கலப்புத் திருமணம் புரிந்து கொண்டோருக்குப் பரிசுகளும், சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கி, முடிவில், விழாப்பேருரையாற்றினார்.

செய்தித்துறை துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் நன்றி கூறினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.

# அறிஞர் அண்ணாவைப் போல இந்தியத் துணைக்கண்டத்து அரசியலில் ஜனநாயகத்தை வளர்த்தவர்கள் இல்லை!

## அண்ணா பிறந்த நாள் விழாவில் முதல்வர் உரை

எந்த மாமனிதரின் காலடிச் சுவடுகளை, நாம் காலம் தோறும் பின்பற்ற வேண்டுமோ, எந்த தவப் புதல்வரின் கருத்துகளை, நாம் காலகாலத் திற்கும் செயல்படுத்த வேண்டுமோ, அந்த மாமனி



தரான பேரறிஞர் அண்ணாவின் பிறந்த பொன் னாளை, இன்று மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த நாள், இன்றைய காலகட்டத்தில், ஒவ் வொரு தமிழனும் தன்னையும், தனது இலக்கையும் அறிந்துகொள்ள வேண்டிய நன்னாள்.

நாம் அறிஞர்களுக்கும், சான்றோர்களுக்கும் இப்படி விழா நடத்துவது, அவர்கள் நினைவைப் போற்றுவதற்காக மட்டுமல்ல, அவர்கள் வகுத்துத் தந்துள்ள பாதையில், நாம் சரியாக நடைபோடு கிறோமா, என்பதைத் தெரிந்துகொள்ளவும் தான்!

சிலர் - பிறந்த தாயகத்துக்காக மட்டும் போராடு வார்கள்.

சிலர் - பேசும் தாய்மொழிக்காக மட்டும் போராடுவார்கள்.

ஆனால், தாயகத்துக்காகவும், தாய்மொழிக் காகவும், காலமெல்லாம் போராடி, வெற்றிமேல் வெற்றி கண்ட தலைவர்களில், முன்வரிசையில் முன்னணித் தளபதியாய், தளநாயகராய்த் திகழ் பவர், நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

**'வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். அந்த எழுச்சியைத் தமிழகத்துக்கு மட்டுமல்ல; தமிழுக் கும் உருவாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா.**

'போர் வீரர்கள் செல்வதற்கு முன் பாதை போடுவோர், கரடுமுரடான பாதைகளைச் செப்ப னிட்டு, முன்னே செல்வது போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல, நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஆபாசங்களையும், ஊழல்களையும் அறவே ஒழித்து, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டுச் செல்வது, நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்', - என ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

சமுதாயச் சாலையைச் செப்பனிடுவது ஒன்று; அந்தச் சாலையில் நடைபோடும் போர் வீரனாக

விளங்குவது, வேறொன்று. ஆனால், இந்த இரண்டு சாதனைகளின் அருமையான தொகுப்பு தான், பேரறிஞர் அண்ணா.

அண்ணா அவர்கள் பாதையை உருவாக்கிய தொண்டர் மட்டுமல்ல; அந்தப் பாதையில், ஏறுநடை போடும் வீரர்கள் பலரை உருவாக்கிய தீரர். நல்ல நாற்றங்காலையும் உருவாக்கி, அதில் நல்ல பயிர்களையும் வளர்த்துத் தந்த, சொல்லேர் உழவர் ஆவார் நம் அண்ணா. அவரது இந்த முயற்சிகளின் நன்கொடை தான், இன்று நாம் காண்கின்ற, உலகம் வியந்து பாராட்டுகின்ற தமிழ்ச் சமுதாயம்; இன்று நாம் அமைத்திருக்கும் இந்த அரசு! எனவே தான் ஆண்டுதோறும் எழுச்சி யோடு, அண்ணாவின் பிறந்த நாளைக் கொண் டாடுவதில், நாம் பெருமிதம் கொள்கிறோம்; பெருமகிழ்ச்சியடைகிறோம்; பெருமைப்படு கிறோம்!!

அண்ணா அவர்களால் ஈர்க்கப்படாத எழுத் தாளரில்லை, பேச்சாளரில்லை, கலைஞர்களில்லை, அரசியல் நிபுணர்களில்லை, பகுத்தறிவுச் செம்மல் களில்லை, போராட்ட வீரர்களில்லை - குழந்தை களுக்குக்கூடத் தெரியும்!

**ஆகவே தான், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருமுறை குறிப் பிட்டார்கள்; - ''அண்ணா என்கிற இந்தப் பெயர், இன்று இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு மகத்தான சக்தி! அந்தச் சக்தி வெளிச்சொணர்ந்த வரலாறுதான், தமிழர்களின் தன்மான வரலாறு!''**

ஒரு காலத்தில் இரும்புத் திரைபோட்டு, மாற்றார்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்த, அந்த காந்த சக்தி, மறைக்க முடியாத ஆற்றல்மிக்க சக்தியாக, மாந்தருள் ஓர் மாணிக்க மாய், இமயமாய் உயர்ந்தது.

அவரைப் பார்த்து எள்ளி நகைத்தோர், ஏகடியம் பேசியவர்கள் எல்லாம், அண்ணாவின் புகழ்பாடும் நிலைமைக்குச் சரித்திரம் அவர்களை ஆளாக்கியது.

ஏனென்றால், மாற்றாரை மதிக்கும் மனப் பக்குவம், அவரைப் போல எவருக்கும் இருந்த தில்லை. அண்ணாவின் உள்ளம், அன்பு உள்ளம்- தொண்டு உள்ளம்.

'தூய உள்ளம், அன்புள்ளம் பெரிய உள்ளம்,
தொல்லுலக மக்கள் எல்லாம்
ஒன்றே என்னும் தாயுள்ளம்'. அந்த தன்னிகரற்ற தலைவரின் உள்ளம்.

இந்தியத் துணைக் கண்டத்து அரசியலில், ஜனநாயகத்தை, அண்ணாவைப் போல வளர்த்த வர்கள் இல்லை. வன்முறை அவர் அறியாதது. வஞ்சகம் அவருக்குத் தெரியாதது. ஆகவேதான், ''தென்னாட்டுக் காந்தி'', என்று அவர் அழைக்கப் பட்டார்.

அண்ணாவின் நினைவு வரும்போதெல்லாம், எனக்குப் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் ஒன்றும் நினைவுக்கு வரும்:

**''தமிழுக்குத் தொண்டுசெய்து
சிறைக்குச் சென்றோன்;
தலைசிறந்த பேச்சுவல்லோன்;
தமிழ வீரன்;
தமர் என்றும் தான் என்றும்
நினைப்பதன்றித்
'தமிழ்நாட்டின் நலத்தினுக்கே
உயிர் உடல்கள்
அமைக' என இரவு பகல்
உழைக்கும் மேலோன்'**

—என்னும் இந்தப் பாடல், அண்ணாவை நாம் எப்படி நினைவு கூர வேண்டுமோ, அப்படி நினைவு கூர்கின்ற பாடலாக அமைந்திருக்கிறது.

அண்ணாவின் கனவுகள் அன்று புரட்சித் தலைவரால், இன்று அவரது பாதையில் வீறு நடைபோடும் உங்கள் அரசால், உங்கள் சகோதரி யின் தலைமையில் நிறைவேற்றப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

**சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின் மேம் பாட்டுக்காகச் செயல்படும் அரசு, இந்த அரசு. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற அண்ணாவின் எண்ணங்களுக்கு, உருக் கொடுக்கும் அரசு; அவரது கொள்கைகளை நெஞ்சில் சுமந்து செயலாற்றும் அரசு.**

அந்தப் பேரறிஞர் பெருந்தகையின் 84-ஆம் பிறந்த நாளாகிய இன்று, அண்ணாவின் பெண் ணுரிமைக் கனவுகள் நனவாக்கப்பட்டதை எண்ணி மகிழ்கிறேன், திராவிட இயக்கத்தின் இலட்சிய விளக்கு, ஒரு பெண்ணாகிய என் கையில் இன்று ஒப்படைக்கப்பட்டிருப்பதற்குக் கால இயற்கைக்கும் தமிழக மக்களுக்கும், என் நன்றியைக் காணிக்கை யாக்கிக் கொள்கிறேன்! பேரறிஞர் அண்ணாவின் புகழையும், பெருமையையும், என்றென்றும் காப் போம் என்று உறுதி பூண்டு; தானே தமிழாகவும், தமிழகமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த வரலாற்று நாயகரை வணங்கி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**-15.9.92 அன்று, சென்னை யில் நடைபெற்ற அறிஞர் அண்ணா அவர்களின் 84-வது பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை.**

---

**தமிழ்நாட்டிலுள்ள வனத்துறைக் காவலர் களுக்கு ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகள் வழங்கப் படும். இதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.18 இலட்சம் ஒதுக்கியுள்ளார் என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் நிருபர்களிடம் சென்னையில் தெரிவித் தார். இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை ரூ.16 கோடி பெறுமானமுள்ள கடத்தல் சந்தன மரங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.**

நான்காம் அட்டை:

## திருச்சியில்

# முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா!

திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா விளையாட்டரங்கில், 15.9.92 அன்று மாலை நடைபெற்ற 'அண்ணா பிறந்த நாள் - தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா' நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

தமிழ்நாடு அரசு காவல்துறை சார்பில், நடத்தப்பெற்ற இவ்விழாவில்- மாண்புமிகு முதல்வர் அவர்களை, உள்துறைச் செயலர் திரு. கே.மலைச்சாமி இ.ஆ.ப., காவல்த்துறைத் தலைமை இயக்குநர் திரு. சு.ஸ்ரீபால் இ.கா.ப., மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிருஷ்ணசாமி ஆகியோர் வரவேற்றார்கள்.

காவல் துறையினர் அளித்த அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள்- வீரச்செயல் மற்றும், சிறந்த தொண்டாற்றிய காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர், ஊர்க்காவல் படையினர் ஆகிய 83 பேருக்குப் பதக்கங்களை வழங்கினார்.

அவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாகத் திரு. சு.ஸ்ரீபால் இ.கா.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்; திரு. கே.மலைச்சாமி இ.ஆ.ப. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.




தமிழினத்திலுள்ள அனைத்துத் தரப்பினரின் நிலையான வணக்கத்திற்கும், மரியாதைக்கும், போற்றத்தக்க புகழுக்கும் பெருமைக்கும் உரிய, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த -திரு நாளில், நாடு காக்கும் நற்பணியில் ஈடுபட்டி ருக்கும், சீருடை அலுவலர்களாகிய உங்களைச் சிறப்பிக்கும் இந்த இனிய விழாவில், பங்கு பெறு வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத் துறை, ஊர்க்காவல் படை, என்னும் நான்கு துறைகளைச் சார்ந்த, கடமை வீரர்களாகிய உங்



களது வீரத்தை, விவேகத்தை, தொண்டினை, வியந்து பாராட்டி, அரசு இன்று விழா எடுக்கிறது.

தமிழக மக்களின் உயிரை, உடலை, உடைமையைக் காக்கும், உன்னதப் பணியில் ஈடுபட்டிருக்கும் உங்களுக்கு, விருது வழங்கும் வீரவிழா, பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளாகிய இன்று எடுக்கப்படுவது, ஏற்புடையது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று தாரக மந்திரங்களைத் தந்து, தமிழர்களுடைய உரிமைகளின் காவலராய் விளங்கியவர், பேரறிஞர் அண்ணா!

அந்தக் காவிய நாயகன் பிறந்த நாளில், காவலர்களுக்கு விருது வழங்குவது என்பது, எவ்வளவு பொருத்தமானது என்பதை எண்ணி மகிழ்கிறேன்.

மற்றவர்களைவிட, மாபெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலையில், நீங்கள் எப்போதும் இருக்கிறீர்கள். மக்களைக் காப்பதும், சத்தியத்திற்குத் துணை நிற்பதும், நீங்கள் என்றென்றும் பின்பற்றவேண்டிய தலையாய கடமைகள் ஆகும்.

தூங்காமை, கல்வி, துணிவுடமை, என இம் மூன்றும், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு இலக்கணமாகும் என்பது, வள்ளுவப் பெருந்தகையின் கூற்றாகும். ஆனால் உங்களுக்கு, அம் மூன்றும் மெத்த அவசியம் என்பது, நடைமுறை உண்மையாகும்.

கடமை நெஞ்சமும், மேற்கொண்ட பணியை மேலும் சிறப்புறச் செய்யும் திறனும், தடைகண்டு தளராது போராடும் மனத்துணிச்சலும் பெற்றவர்கள் நீங்கள்.

இந்தச் சிறப்பியல்புகளை எல்லாம், இயல்பாகவே பெற்றிருக்கின்ற உங்கள் அனைவர் மத்தியில், உங்கள் சகோதரர்கள் ஒரு சிலர் செயற்

## பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வு: மாண்புமிகு முதல்வர் கண்டனம்

பெட்ரோலியப் பொருட்களின் விலைகளை 15.9.1992 முதல் மத்திய அரசு உயர்த்தியிருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நடுத்தர மக்கள் தங்கள் அன்றாடப் போக்குவரத்துக்கும் பிற பணிகளுக்கும் பேருந்துகளையே பயன்படுத்துவதால் டீசல் விலை உயர்வு நடுத்தர மக்களை மிகவும் பாதிக்குமென முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு டீசலைப் பயன்படுத்துவதால் விவசாயிகள் இந்த டீசல் விலை உயர்வினால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த தமிழக அரசு தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வரும் இந்தச் சமயத்தில் மத்திய அரசு ஒருதலைப் பட்சமாக இவ்வாறு டீசல் விலையை உயர்த்தி இருப்பது, விலைவாசி உயர்வைக் குறைக்கத் தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைப் பயனளிக்காமல் செய்துவிடும்.

சமையல் வாயுவின் விலையை உயர்த்தியிருப்பதையும் முதல்வர் அவர்கள் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

நகரங்களிலும், சிறிய நகரங்களிலும், தற்போது கிராமங்களிலும் கூட சமையல் வாயு அதிக அளவில் பயன்படுத்தப்படுவதால் இந்த விலை உயர்வு பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கும் என்று முதல்வர் அவர்கள் கவலையுடன் குறிப்பிட்டுள்ளார்.

பெட்ரோலியப் பொருட்களின் இந்த விலை உயர்வினால் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து, அதனால் ஒட்டுமொத்தமாக எல்லாப் பொருட்களின் விலை உயர்வுக்கும் காரணமாக அமைந்துவிடும் என முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்.

எனவே இது குறித்து மறுபரிசீலனை செய்து பொதுமக்களின் நலன் கருதி, பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வைத் திரும்பப் பெறும்படி மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கரிய செயல் புரிந்து, இன்று 'முதலமைச்சர் விருது' பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அந்த வாய்ப்பு ஒரு சிலருக்கே அளிக்கப்பட்டிருந் தாலும், அவர்களது வெற்றியில், உங்கள் அனை வரின் ஒருமித்த உழைப்பையும் நான் காண் கிறேன்.

எனவே உங்களோடு சேர்ந்து, அவர்களை நான் வாழ்த்துகிறேன்; படைத்த சாதனைகளுக் காகப் பாராட்டுகிறேன். அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த தமிழகத்தில், துப்பாக்கி கலாச்சாரம் தோன்றக் காரணமாய் இருந்த சூழ்நிலையை, முற்றிலும் நீக்குவதற்கு, முழுத் துணையாய் இருந்த வர்கள் நீங்கள். மது அரக்கனை வெல்லும் மகத் தான போரில், உங்கள் பணி பாராட்டுக்குரியது.

இன்று தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, பாங்குறப் பராமரிக்கப்படுகிறதென்றால், அதற்குக் காரணம் நீங்கள்!

சமுதாயமும், அரசும், உங்களிடம் எதிர்பார்ப் பவை ஏராளம். இந்த எதிர்பார்ப்புகளை, உரிய வகையில் நிறைவேற்றி வைக்கும் திறமையும் வேகமும், உங்களிடம் உண்டு என்பதை நான் அறிவேன்.

''நமக்கு இன்னலும் இடையூறும் இருக்கத்தான் செய்யும். ஆனால் நமது உழைப்பு ஒருநாளும் வீணாகாது'', என்ற பேரறிஞர் அண்ணாவின் நம்பிக்கை, நடைமுறை தத்துவமாக உங்களிடம் மிளிர்கிறது. உழைப்புக்குத் தகுந்த மதிப்பும், உரிய சிறப்பும் வழங்குகிற வகையில், நம் தமிழக அரசு இந்த விழாவினை எடுத்து, உங்களைக் கௌரவிக் கிறது.



எங்களுடைய அரசு ஆட்சிக்கு வந்ததும், காவலர் களின் நலம் பேணி, வளம் காண, பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தியதை, அனைவரும் அறிவீர்கள். நாங்கள் ஆட்சிக்கு வரும்முன், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 200 கோடி ரூபாய் இத்துறைக்குச் செலவிடப்பட்டது. இது, 1991-92-ஆம் ஆண்டிற்கு, 250 கோடி ரூபா யாக உயர்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு, 275 கோடி ரூபாயாக மேலும் உயர்த்தி உள்ளோம்.

10 ஆண்டுகளில் சுமார் 12.50 கோடி ரூபாய் செலவு செய்து, சுமார் 1,500 வீடுகளைத்தான், காவலர் வீட்டு வசதிக் கழகத்தினர், கட்டி இருந் தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், மீண்டும் அக்கழகத்தினைப் புதுப்பித்து, ஒரே ஆண்டில், 12¼ கோடி ரூபாய் செலவு செய்து, சுமார் 1,000 வீடுகளுக்குக் குறையாமல் கட்டும்படி, அந்த வீட்டு வசதிக் கழகத்தின் பணியினை, முடுக்கி விட்டிருக்கிறோம். 10 ஆண்டுகளில் 1,500 வீடுகளைக் கட்டிய இக்கழகத்தின்மூலம், ஒரே ஆண்டிலேயே 1000 வீடுகள் கட்டப்பட உள்ளது, எங்கள் வேகத்திற்கும், விரைந்து பணி முடிக்கும் செயலாற்றலுக்கும், எடுத்துக்காட்டாகும்.

இதுபோல எங்கள் அரசு, காவலர்களுக்கு விரைந்து செய்துள்ள நன்மைகளில் சிலவற்றை, எடுத்துச் சொல்லுவது கடமையெனக் கருதுகிறேன்.

- காவல் நிலையங்களுக்கு என 223 புதிய ஜீப்புகள் வாங்கி வழங்கப்பட்டிருக்கின்றன.
- சீருடைப்படி உயர்த்தப்பட்டு இருக்கிறது.
- பயணப்படிக்காகக் கூடுதல் ஒதுக்கீடு செய்யப் பட்டு இருக்கிறது.
- புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- காவலர் நல நிதி உயர்த்தப்பட்டு இருக்கிறது.
- பணியில் இருக்கும்போது, வீர மரணம் அடைந்த வர்களின் குடும்பத்தினருக்கு, வழங்கப்படும் உதவித் தொகை, ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது.
- காவல்துறை பணியாளர் தங்குவதற்கு, சென்னை யில் ஒரு ஓய்வு இல்லம் கட்ட, அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.
- தமிழகத்தில் உள்ள எல்லாக்காவலர் குடியிருப்பு களில் உள்ள கழிப்பிடங்கள், நீரடி கழிப்பிடங் களாக மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்க; தற்போது உள்ள விலை விகிதப்படி, 50 சதவிகிதம் மானியமாக வழங்க ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)

# தந்தை பெரியாரும் பெண்மையும்



பேராசிரியர்
**டாக்டர் சரளா இராச கோபாலன்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் பெண்மைக்கு ஏற்றம் கொடுத்தார். அவர் வாழ்க்கைத் துணைநலம் பற்றிக் கூறினார். ஈன்றாளுக்குச் சிறப்பிடம் தந்தார். சங்க காலத்தில் ஔவையார் அரசியலிலும் பங்கேற்றுப் பெண்மையின் பெருமையை நிலை நாட்டினார். பின்னாளில் காரைக்கால் அம்மையார் சமயத்துறையில் பெண்மையின் சமநிலையை வெளிப்படுத்தினார்.

சங்க காலத்தில் கல்வியாலும் பிறவற்றாலும் தலை நிமிர்ந்திருந்த பெண்மை, இடைக்காலத்தில் தாழ்வு நிலையில் சிறைப்பட்டது. இதன் விளைவால் சமுதாயம் சீர் கெட்டது. எனவே, அண்மைக் காலத்தில் இதைப்பற்றிச் சில சிந்தனையாளர்கள் எண்ணிப் பார்த்தனர். வடக்கில் இராசாராம் மோகன்ராய். பெண்மையின் நலம் தேடும் தொண்டில் முன்னோடியாய்த் திகழ்ந்தார். தெற்கில், மாயூரம் நீதிபதி வேதநாயகர் பெண்மையின் நன்மை வழிக்குக் கால்கோள் இட்டார். அவருக்குப்பிறகு, திரு.வி.க. பெண்ணின் பெருமையை எடுத்துக் கூறினார். பெரியார் பெண்ணடிமையை மாற்றப்பாடுபட்டார். பின்னர், பாரதியும், பாரதிதாசனும் பெண்மையின் உயர்வுக்குப் பெரிதும் முயன்றார்கள்.

பெரியார் தன் உரையாலும் செயலாலும் பெண்களுக்கு நன்மை சேர்க்க முயற்சி செய்தார். அவர் ஓரிடத்தில் கூட 'பெண்மை' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. அவர் பெண்ணடிமை என்ற சொல்லையே எங்கும் கையாண்டிருக்கிறார். இதிலிருந்து அவர் மனத்தில் பெண்கள் அடிமையாய் இருக்கும் நிலை எந்த அளவுக்கு ஆழப்பதிந்திருந்தது. என்பதை உணர முடிகிறது.

பெண் மக்களின் அடிமை, ஆண்களால் உருவாக்கப்பட்டதல்ல. அது இறைவனால் அமைக்கப்பட்டது என்று பெண்களில் பலர் நம்பினார்கள். இந்த நம்பிக்கையையே ஒழிக்க வேண்டுமென்று பெரியார் விரும்பினார், எடுத்துக் கூறினார்-

மண்ணடிமைக்கும், நாட்டின் சீரழிவுக்கும் பெண்ணடிமையே காரணம் என்று ஆணித்தரமாக அவர் கூறியிருக்கிறார். 'ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழ வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒழுக்கம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். ஒழுக்கம் என்பதோ, கற்பு என்பதோ, ஆண் பெண் இருபாலருக்கும் சொந்தமானதேயன்றி, பெண்களுக்கு மட்டும் உரியதல்ல. இன்றைய சீர்கேடான நிலைக்கும் பெண் மக்கள் மிருகங்களை விடக் கேவலமாகக் கருதப்பட்டதும் அவர்கள் பிள்ளை பெறும் இயந்திரங்களாக எண்ணப்பட்டதும் மனித ஜென்மத்துக்கும் பெண்களுக்கும் சம்பந்தமே இல்லை என மதித்து வந்ததும் அதனால் இவன் ஒழுக்கத்தை விட்டு விட்டு வாழ்வதும் காரணமாகும்'' என்று அவர் கூறியிருக்கிறார். (குடியரசு 22.12.1929).

பெண் விடுதலைக்கு ஆண்களை விடப் பெண்களே பெரிதும் தடையாக இருக்கிறார்கள். என்பது அவருடைய கருத்து. பெண் இல்லாமல்

# பெரியாருக்கு அண்ணா அளித்த பரிசு!

''...நெடுந்தொலைவு போன மகன், திரும்பத் தந்தையைப் பார்க்க வரும்போது கையில் கிடைத்ததை வாங்கி வந்து தருவான். அதேபோல, இன்று பெரியாரைப் பார்க்க வந்திருக்கிற நானும், ஓர் அன்புப் பரிசை-கனியை- ஏதோ என்னால் இயன்றதை- கொண்டு வந்திருக்கிறேன்.

...சுயமரியாதை இயக்கத் திருமணங்களை நடத்திச் சாதி ஒழிப்புக்காகப் பெரியார் பாடு பட்டு வருகிறார். பகுத்தறிவுத் திருமணங்களும், கலப்புத் திருமணங்களும் நாட்டில் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன.

''இந்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கிச் 'சுயமரியாதைத் திருமணச் சட்டம்' கொண்டு வரப்போகிறோம் என்ற நல்ல செய்தியை அன்புப் பரிசை- கனியை- பெரியாரிடம் அளிக்கிறேன்''.

இவ்வாறு 7.6.67-இல் திருச்சி பெரியார் மாளிகையில் பொதுவுடைமைத்' தலைவர் ப. சீவானந்தம் அவர்களுடைய புதல்வியின் திருமண விழாவிலேயே அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

இதைக் கேட்டதும், பெரியாரின் உற்சாகம் கங்கு, கரையையெல்லாம் உடைத்துக் கொண்டு பொங்கிப் பெருகியது! தம் பருத்த மேனி குலுங்கச் சிரித்து மகிழ்ந்து கைதட்டினார்.

பூரிப்பில் மிகுந்த பெரியார் அவர்கள் ''இதை அண்ணா அவர்களின் அருள்வாக்காகவே எடுத்துக் கொள்கிறேன்'' என்று கூறிப் புகழ் மாலை சூட்டினார் அண்ணாவுக்கு!

NK

ஆண் வாழ முடியும். ஆண் இல்லாமல் பெண் வாழவே முடியாது என்றும் தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையே தங்களை ஆண்களுக்கு அடிமையாகப் படைக்கப்பட்டிருக்கிறது என்று பெண்கள் எண்ணிக் கொண்டிருப்பதே அந்நிலைக்குக் காரணமாக இருக்கிறது என்றும் அவர் ஆய்ந்துரைக்கிறார்-

கற்பு பெண்களுக்கு மட்டும் தான் தேவை; அது ஆண்களுக்குத் தேவையில்லை என்று கூறப்பட்ட கருத்தை அவர் எதிர்த்தார்; கற்பு என்பதைச் சுகாதாரத்தையும் சரீரத்தையும் பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன் என்றாலும், இன்று அந்த முறையில் கையாளப்படுவதில்லை கற்பு பெண்களுக்கு வலியுறுத்தப்படுவதில்லை என்பதிலிருந்து இதை உணர்ந்து கொள்ளலாம்' என்று அவர் சொல்கிறார் (குடியரசு 23.12.1936).

பெரியாருடைய தங்கை மகள் ஒன்பது வயதுச் சிறுமி 'அம்மாயி'-க்குத் திருமணம் நடைபெற்றது. ஆனால், முப்பது நாட்களுக்குள் ஒன்றும் அறியா அச்சிறுமி விதவையானார். இதைக் கண்ட பெரியார் மனம் வருந்தினார். அவளுக்கு மறுவாழ்வு தரவேண்டும் என்று துடித்தார். உரிய பருவத்தில் அவளுடைய மறு திருமணத்திற்கு முயற்சியை மேற்கொண்டார்.

ஆனால், உற்றவரும் மற்றவரும் எதிர்த்தார்கள். அதைக் கண்டு அவர் அஞ்சவில்லை. வாடிப்போக விருந்த அந்த இளம் விதவைக்குத் திருமணம் செய்து பூச்சூடும் நிலையை உருவாக்கி மகிழ்ந்தார். இப்படிச் செய்யததன் மூலமாக - தன் குடும்பத்திலேயே புதுமையை - புரட்சியை அவர் செய்து காட்டினார்.

தேவதாசி முறை பெண்மைமேல் சுமத்தப்பட்ட இழிநிலை. இது இந்நாட்டில் மட்டுமே பூத்துக் குலுங்கியது. இதைக்கண்டு காந்தியடிகள் வருந்தினார். அவர்கள் தம் தொழிலிலிருந்து விலகி வாழ வேண்டுமென்று கூறினார். அவர்களைச் 'சகோதரிகளே' என்று அழைத்த திரு.வி.க. அவர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். தேவதாசி முறையை ஒழிக்க டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மசோதா கொண்டு வந்தார். பெரியார் இதற்கு முழுமையான ஆதரவு நல்கினார். பொட்டு கட்டும் பழக்கத்தை அடியோடு ஒழிப்பதற்காக முன் நின்றார்.

பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தால், அவர்களால் எந்த நிலையிலும் வாழ முடியும் என்பது பெரியாரின் சிந்தனை. எனவே, பெண்கள், துணிவுடன் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று அவர் வழிகாட்டினார்.

நாட்டில் மக்கள் தொகை பெருகுவதை மாற்றுவதற்கு இன்று கருத்தடை வலியுறுத்தப்படுகிறது. பெரியாரும் கருத்தடையை ஆதரித்திருக்கிறார். ஆனால் அவர் கூறிய காரணம் வேறானது. ஏற்றுக் கொள்ளவும் தக்கது. பெண்கள் விடுதலை அடையவும், சுயேச்சை நிலை பெறவும் கருத்தடை அவசியம் என்று கூறியுள்ளார் அவர்.

பெண்மையின் முன்னேற்றத்திற்குக் கல்வி அவசியம். ஆனால், 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?' என்று கூறப்பட்டு வந்தது. பெண் கல்வியை வேதநாயகரும் வற்புறுத்திப் பாடினார். பெரியாரும் பெண் கல்வியின் இன்றியமையாமையை விளக்கினார். ''1,2,3 கூட எண்ணத் தெரியாத நிலையில் பெண்களைக் கட்டிக் கொண்டு அவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பது என்றால் எப்படி முடியும்'' என்று

அவர் கேள்வி கேட்டிருக்கிறார். பெண்களுக்குக் கல்வி அளிக்க வேண்டும். வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று அவர் கூறியிருக் கிறார். 'கன்னிகாதானம்' என்ற சொல்லே அகராதியிலிருந்து நீக்கி விடவேண்டும் என்பதும் அவரு டைய எண்ணமாகும். பெண்கள் நகைகளை அணிவதையும் அவர் வெறுத்தார். அவர்கள் நகை தாங்கி களாக இருப்பதை மாற்ற முனைந் தார்.

அவர் பெண்மைக்காகப் பாடு பட்டார். பேசினார். எழுதினார். செயலிலும் செய்து காட்டினார்.

பெண்கள் சமுதாயத் தொண்டி லும் பங்கு ஏற்க வேண்டும் என்று செஞ்சார விழைந்தார். தன் மனைவி நாகம்மையையும், தங்கை கண்ணம் மாளையும் பொதுவாழ்க்கையில் ஈடுபடுத்தினார். கிளர்ச்சிகளில் பங்கேற்கச் செய்தார்.

இப்படி, உள்ளம், உரை, உழைப் பால், பெண்மைக்கு அவர் ஏற்றம் தர முயன்றார். இதைப் பெண்கள் எண்ணிப் பார்த்தனர். அவருக்கு நன்றி காட்ட நினைத்தனர். 13.11.1938-இல் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில், ஈ.வெ. ராம சாமியாக இருந்த அவருக்கு ''பெரியார்'' என்ற பட்டம் தந் தனர். பேருவகை கொண்டனர். அவருடைய தொண்டால், பெண்மை உயர்ந்தது. மனத்திண்மை கொண் டது, உண்மை உணர்ந்தது. நன்மை யும் பெற்றது. •

## அந்த நாள்!

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். ஆயினும், மற்றப் பலரையும்விட அவ ருடன் இடைவிடாது இருந்திருக்கும் வாய்ப் பினைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாள்கள் எனக்கு மிகவும் இனிமையான நாள்கள். இன்றும் அவைகளை நினைவிற் கொண்டுவரும்போது இனிமை பெறுகிறேன். - பேரறிஞர் அண்ணா

# களர் நிலத்தைச்சீர்திருத்த செலவு குறைவான வழிமுறைகள்

தமிழ்நாட்டில் சுமார் 2,300 எக்டர் அதிகக் களர்கொண்ட நிலங்களாக உள்ளது. குறிப்பாகத் தென்ஆர்க்காடு, சேலம், தஞ்சாவூர் மாவட்டங்களில் இம்மாதிரியான நிலங்கள் அதிகம் உள்ளது. இந் நிலங்களைச் சீர்திருத்துவதற்கு ஜிப்சம் ஒரு சீர்திருத்தியாகும். ஜிப்சத்தின் விலை குறைவாக இருந் தாலும் களர்நிலத்தைத் திருத்து வதற்கு அதிக அளவு (டன் கணக் கில்) தேவைப்படுவதால் சீர்திருத்தச் செலவு அதிகமாகிறது.

களர்நிலத்தைப் பரிசோதனை யிட்டுக் காரநிலைக்குத் தகுந்தாற் போல் ஜிப்சம் தேவை நிர்ணயிக்கப் படுகிறது. தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த உவர் மற்றும் களர் மண் ஆராய்ச்சி நிலையம், திருச்சியில் நடத்திய ஆராய்ச்சியின் மூலம் ஜிப்சம் அளவு குறைத்துக் களர்நிலத்தைச் சீர்திருத்தம் செய்யலாமென்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இம்முறைப் படி மண்பரிசோதனைப் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட ஜிப்சம் தேவை யில் நான்கில் ஒருபங்கு (25 விழுக்காடு) இட்டால் போது மானது. நல்ல பலன்கிட்ட இந்த அளவு ஜிப்சத்தோடு எக்டருக்கு ஐந்து டன் என்ற அளவு வேப்பந் தழையும் இடவேண்டும்.

நிலத்தைப் பகுதிகளாகப்பிரித்து வரப்புகட்டி மண்பரிசோதனையின் அளவில் 25 விழுக்காடு ஜிப்சத்தை ஒரே சீராகத்தூவி நிலத்தை மேலாக உழுது விடவேண்டும். 15 நாட் களுக்கு நீர் நிறுத்தவேண்டும். பின்பு நீரினை வடித்துவிட்டு வேப்பந்தழை மிதித்து ஒரு வாரத்தில் நெற்பயிர் நடவேண்டும். கார்நிலங்களுக்கு கோ.43 நெல் சிறந்தது. சுமார் 30 நாள் வயதுடைய நாற்றுகளைக் குத் திற்கு நான்கு நாற்றுகள் வீதம் நடப்பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் பரிந்துரைக்கப்படும் தழை, மணி, சாம்பல் சத்தைவிட 25 சதம் அதிகத் தழைச்சத்து அளித்தால் களர்நிலங்கள் நல்ல பலனளிக்கிறது என்பதும் ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது. களர் சீர்திருத்தம் செய்தமையால் நெல் விளைச்சல் சுமார் 23 விழுக்காடு அதிக மாயிற்று. ஆகையால் களர்நிலத் தைச் சீர்திருத்தி நல்ல பலனடைய—

- பரிசோதனையில் நிர்ணயிக்கப்பட்ட ஜிப்சம் தேவையில் நான்கில் ஒரு பங்கு (25 விழுக்காடு) இட்டால் போதுமானது.
- வேப்பந்தழை எக்டருக்கு 5 டன் என்ற அளவில் இடவேண்டும்.
- கோ.43 நெல் இம்மாதிரி சீர் திருத்தம் செய்த வயலில் குத்திற்கு நான்கு நாற்றுக்கள் விகிதம் பயிரிட வேண்டும்.
- தழைச்சத்து 25 விழுக்காடு அதிக மளிக்கவேண்டும்.
- சிங்சல்பேட் எக்டருக்கு 25 கிலோ அளிக்க வேண்டும்.

மேற்கூறிய முறை யாவை யும் கடைப்பிடித்து களர்நிலத்தில் நல்ல பலன் பெற விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்



# அந்த வசந்தம்

## பேரறிஞர் அண்ணா

அந்த 'வசந்தம்'

எனக்கொரு 'வசந்தகாலம்' இருந்தது நீண்ட நாட்களுக்கு முன்பு — அதை மறந்துவிடவில்லை — அந்த 'வசந்தகால'த்தை நினைத்துக்கொண்டு, இன்றைய வாழ்க்கையிலே ஏற்படுகிற [illegible] குறைத்துக் கொள்கிறேன்.

பெரியாரிடம், அந்த 'வசந்தகால'த்திலும், இன்று நான் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள [illegible]

'வசந்தகாலம்' என்றேனே, அந்த நாளில், நான் காஞ்சியிலிருந்து ஈரோட்டுக்குச் சென்று 'குடியரசு' [illegible]

அந்தக் 'குடியரசு' காலத்தில், நான் அவருடன் [illegible] போது, உள்ளத்தைப் [illegible] கண்டேன், புதுமை எண்ணம் பரவக் கண்டேன்.

அப்போது, '[illegible]', [illegible]

[illegible]

பார்த்திட வேண்டியதில்லை.

-1967ல் தந்தை பெரியார் அவர்களின் 89 வது ஆண்டு பிறந்த நாள் விழாவின் போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் தம் கைப்பட 'விடுதலை' மலருக்கு எழுதிய கட்டுரை.



[illegible]



மாலை நேரத்திலே நல்ல மலர்களுக்கிடையே தனிமையில் இருப்பதால் ஏற்படும் இன்பம் போன்றது தான், அமைதியான இல்லற வாழ்க்கையும்.

- பேரறிஞர் அண்ணா.

[illegible] மிக விசேஷமான [illegible] நிலைகுலைய வைக்கிறீர்! [illegible] கிறுக்குகிறீர்! [illegible] — என்று கூறியும், [illegible] நாளை தீர்த்துக் கட்டுகிறேன்! — என்று மிரட்டியும் — தமிழகத் [illegible] பறித்தனர், மௌனம் செய்தனர், மறுப்பு உரைத்தனர், [illegible] அவர் பேச்சைக் கேட்ட [illegible] அந்தப் பேச்சு [illegible]

[illegible]

[illegible] — என்று [illegible]

[illegible]

தமிழகத்தில் இன்று [illegible]

[illegible] — என்று கேட்கிறார்கள், [illegible]

சரித்திரம், கல்வெட்டு, பாட்டு, [illegible]

[illegible] — பெரிய பெரிய [illegible] என்று

[illegible]

[illegible] வாழ்க பெரியார்!



★ பிறருடைய துன்பத்தைத் தன்னுடைய தாக ஏற்றுக் கொள்வதில் எவன் இன்பமடைகிறானோ, அவனே உண் மையான தொண்டன்.

## தந்தை பெரியாரின் 114-வது பிறந்த நாள் விழா

தமிழகத்தில் பகுத்தறிவுச் சுடர் ஏற்றிய தந்தை பெரியார் அவர்களின் 114-வது பிறந்த நாளை யொட்டி, சென்னையில், அண்ணா மேம்பாலம் அருகே உள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 17.9.1992 அன்று காலை, மாலை அணிவித்தார்.

தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை யொட்டி, சென்னை அண்ணா மேம்பாலம் அருகே உள்ள பெரியார் சிலையைச் சுற்றிப் பெரிய மேடை அமைக்கப்பட்டிருந்தது. அந்த வட்டாரமே வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தபின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேடையில் நின்றபடி மக்களைப் பார்த்துக் கையசைத்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்.



## பெரியாரின் நாட்டுப் பற்று!

ஈரோட்டில் பெரியார் ஈ.வே. இராமசாமி மதுவிலக்கு சம்பந்தமாகப் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் அங்கு நடைபெற்ற மது விலக்குப் பணிகளை காந்திஜி பாராட்டியிருக்கிறார். 'சென்னையும், ஆந்திராவும் மெதுவாக முன்னால் வந்து கொண்டிருக்கின்றன. வங்கத்தைப் போன்று அங்கும் 1,500 பேர் கைதானால் நான் வியப்படையமாட்டேன். மதுவிலக்கில் ஈரோடு மட்டும் அஞ்சாது பணியாற்றி வந்திருக்கிறது. அதனால் இராமசாமி நாயக்கருக்கு ஒரு மாதச் சாதாரணச் சிறைத்தண்டனை பரிசாகக் கிடைத்திருக்கிறது. இந்தச் சிறிய ஊரில் மட்டும் ஏற்கெனவே 37 பேருக்குத் தண்டனை கிடைத்து விட்டது. இப்போது நாயக்கரின் மனைவியாரும் அவருடைய சகோதரியும் மறியல் செய்யப் போகிறார்கள்'' என்று, (28.12.1921-இல் வெளியான) 'யங் இந்தியா' இதழில் எழுதினார்.

முக்கியமான தமிழகத் தேசபக்தர்கள் மீது வழக்குத் தொடரப் பெற்று வந்த காலம் 1924 ஜூன். அவ்வாறு வழக்குத் தொடரப் பெற்றவர்களில் பெரியார் ஈ.வே. இராமசாமி ஒருவர். பம்பாய்க்குச் சென்றிருந்த ராஜாஜி, பெரியார் ஈ.வெ. இராமசாமி மீது தொடர்ந்த வழக்கு விசாரணை அக்டோபர் 18-ஆம் தேதியன்று வருகிறது என்பதற்காக, அவசரமாகத் திரும்பி வந்தார். தேவதாஸ் காந்தி, மேலும் ஒருநாள் தங்கியிருந்து விட்டுப் போகுமாறு சொன்னதைக் கூட அவர் ஏற்கவில்லை. சென்னைக்கு நான் 18-ஆம் தேதிதான் போயாக வேண்டும். அன்றுதான் இராமசாமி நாயக்கரின் வழக்கு இறுதி விசாரணை, அவர் மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டப் பெற்றிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அவருக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனை கிடைக்கலாம். எங்களுடைய காங்கிரஸ் நடவடிக்கைகளுக்குத் தீவிரம் நிறைந்த தலைவராக (Head and Active Master) அவர் இருந்து வந்திருக்கிறார். என்று ராஜாஜி இரயிலிலிருந்து 16.10.1924-ஆம் தேதி காந்திக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். •

> அடக்கம், பொறுமை, புத்திக்கூர்மை, திறமை, தியாகம், பிறர் நலன் பேணுதல், எளிமை, அழகு இவையே பெண்களின் மொத்த வடிவம்.
>
> - தமிழ்த் தென்றல் திரு.வி.க.



# மாணவர் கடன்!

அறிஞர் அண்ணா

தான் உண்ட நீரதனைப் பன்மடங்கு பெருக்கி, பார் மகிழத் தருவதற்கே சூல்கொண்டு உலவுவது மேகம். தன் தோகைகளை விரித்துக் கலாப மயில் ஆடுவது தானே கண்டு களித்திடவா? பிறர் காண! பிறர் மகிழ! தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்களைக் கொண்டு தானேயோ அணி கலனைச் செய்து நிலமாது பூட்டிக் கொள்ளுகின் றாள்? இல்லை. மற்றையோர் பெற்றிடத் தருகின் றாள்? ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற் காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க! பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு; பொற்குவியல்; புள்ளிக் கலாப மயில்; கார்மேகம்; நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள். இசைபட மக்கள் வாழ உமது ஆற்றலை ஈந்திட வந்துள்ளீர். இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்...

ஆற்றல் மிக்க அறிவுப்படி எழுந்தபடி இருந் திட வேண்டும். அதற்கான பயிற்சிக் கூடம் பல்கலைக் கழகம்...

எவருக்கும்கட்டுப்படாமல், இழுப்பார் பக்கம் சாய்ந்துவிடாமல் சிந்தித்து உண்மையறிந்து, அறிந் ததனை விளக்கமுடன் எடுத்துரைத்து ஆளடிமை யாகாமல் அச்சமற்று நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக் கழகம்...

"உண்மையெனில் உயிர்கொடுத்தேனும் காத் திடுவோம்; அன்று எனில், உயிர் போவதெனி னும் எதிர்த்து நீக்கிடுவோம்" என்று முழக்கமிட்டு அறிவுத்துறைப் புரட்சியிலே ஈடுபட எழுமாறு பட்டம் பெற்றுள்ள நல்லோரை அழைக்கின்றேன். இந்நாட்டுத் தேள் எனின் கொட்டிடின் குளிர்ச் சியோ காண்போம்? பிறநாட்டுத் தேன் எனின் பருகிடிற் கசப்போ இருந்திடும்? எங்கிருந்து கிடைத்தாலும் ஏற்புடையதெனின் எமதாக்கிக் கொள்வோம் என்ற நோக்கம் தேவை...

மக்கள் தொகையுடன் பட்டம் பெற்றோர் தொகையினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எத்தனைச் சிறிய அளவினது நமது முன்னேற்றம் என்பதனை உணரலாம். எனவேதான் நாட்டு நிலை உயர்ந்திட நல்லோர் மிகப் பலருக்குக் கிடைத்திடா வாய்ப்பைப் பெற்றுள்ள உம்மிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள்...

நாட்டிலே ஒற்றுமை வேண்டும். இது குறிக் கோள். அனைவரும் ஏற்கத்தக்கது. இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது மாணவர் கடன்...

கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்; இனிய எளிய இலட்சியம். கூடி வாழ்வோம். உன்னிடம் உள்ளது எனக்கு. என்னிடம் உள்ளதும் எனக்கு என்று முறை வகுத்திடல், கூடி வாழ்வதாகாது. ஆட்டுக் குட்டியைத்தின்று, ஓநாய், "என்னோடு ஒன்றாக ஆடு இணைந்துவிட்டது. நாங்கள் இணை பிரியாச் சோதரர் ஆகிவிட்டோம்" என்று கூறுவது போன்ற முறையில், 'ஒற்றுமை' வேண்டு வோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்...

தமிழ்-முரசு ஆகட்டும்; பண்பாடு கவசம் ஆகட்டும்; அறிவு-படைக்கலன் ஆகட்டும்; அற நெறி- வழித்துணை ஆகட்டும்! உறுதியுடன் செல வீர்; ஊக்கமுடன் பணி புரிவீர்; ஏற்றமிகு வெற்றி யினை ஈட்டிடுவீர்; பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ, தரணிக்குத் துணை நின்றிடும் தகுதி பெறச் சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

(மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையிலிருந்து)

# மதுவிலக்குப் பிரச்சார வரிகள்

''மதுவைத் தீண்டுமுன்
மனைவி மக்களை நினை.''

''குடிக்கு நீ அடிமையானால்-உன்
குடும்பம் வறுமைக்கு அடிமையாகும்.''

''குடிப்பவனுக்கோ ஒரு வேளை
இன்பம்; குடும்பத்துக்கோ ஓயாத
துன்பம்.''

''உடலை, உணர்வை, உயிரைப்
பறிக்கும் குடிப்பழக்கம் வேண்டவே
வேண்டாம்.''

''மறக்கக் குடித்தவன்
மறக்கப்படுவான்''.

''குடி குடியைக் கெடுக்கும்''.

''மதுவை நாடாதே, மரணத்தைத்
தேடாதே''.



காமராசர் மாவட்டத்தில்

# மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

**மேற்குத்** தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் இந்திய அரசின் 90 சதவிகித நிதி உதவி யுடன் மகாராட்டிரம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங் களிலும் - டையூ, டாமன் ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டில் 25 வட்டங்கள் அடங்கிய ஏழு மாவட்டங்களில் 26,425 சதுர கி.மீட்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வேழு மாவட்டங்களில் காமராசர் மாவட் டமும் ஒன்று. இத்திட்டத்தின் கீழ் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் ஆகிய 3 வட்டங்கள் அடங் கும். இத்திட்டம் வெகுகாலமாகத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் படுகிறது.

மலைப்பிரதேசங்களில் சமச்சீர் நிலை மிகவும் நுட்பம் வாய்ந்தது ஆகும். சுற்றுப்புறச் சூழல், அபி விருத்தித் திட்டங் களுடன் இணைந்து செயல்படும்பொழுது சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுகிறது. எனவே சமச்சீர்நிலையைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. உண்மையில் சமச்சீர் நிலையைத் தொடர்ந்து பேணவும், அபிவிருத்தி செய்யவும் மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம் முக்கியத்துவம் தருகிறது. ஆகவே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் இழந்துபோன சமச்சீர்நிலையை மீண்டும் நிலைப்படுத்துதலே ஆகும். 1. மண் மற்றும் அதன் ஈரப்பதத் தினைப் பாதுகாத்தல். 2. மேல் மண் அரிப்பைத் தடுத்தல். 3. மேல் மண்ணின் வளத்தைப் பாதுகாத்தல் ஆகியன இத்திட்டத்தின் குறிக் கோள்கள் ஆகும்.

இக்குறிக்கோள்களை அடையும் பொருட்டு, கீழ்க்கண்ட துறைகளின் மூலம் இத்திட்டம் நிறைவேற்றப் படுகிறது.

**1. வேளாண்மைப் பொறியியல் துறை**

அ) சமஉயரக் கற்சுவர் கட்டுதல்
ஆ) வண்டல்மண் படியும் குளம் கட்டுதல்
இ) மரம் நடுதல்

**2) தோட்டக் கலைத்துறை**

நீண்ட ஆயுட்கால மரங்கள் வளர்த்தல்

**3) காடுகள் வளர்ப்புத் துறை**

அ) கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல்
ஆ) சம உயரக் கற்சுவர் கட்டுதல்
இ) காடுகள் வளர்த்தல்

எஸ்.கே. மூர்த்தி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
. விருதுநகர்.

இஃதன்றி - பட்டுப்பூச்சி வளர்த்தல், சிறுதொழில் மேம்பாடு ஆகிய திட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் *1986-87* முதல் *1991-92* வரை ரூ.*87.73* இலட்சம் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது. *2,530* ஏக்கர் பரப்புள்ள நிலம் பல்வேறு மண்வளப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மூலம் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இத்திட்டப்பகுதியில் இதுவரை *513* தடுப்பு அணைகளும், *64* வண்டல் மண் படியும் குளங்களும் கட்டப்பட்டுள்ளன.

மேலும் தோட்டக் கலைத்துறையின் வாயிலாக *1986-87* முதல் *1991-92* வரை *14.74* இலட்சம் ரூபாய் செலவில் *2,250* ஏக்கர் பரப்பில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பரப்பில் *85* சதவிகிதம் மா, கொய்யா, ஆகிய தோட்டப் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. மீதி உள்ள இடங்களில் சப்போட்டா, இலந்தை மற்றும் எலுமிச்சை ஆகியவை வளர்க்கப்படுகின்றன. மொத்தத்தில் *903* விவசாயிகள் இதனால் பயனடைந்துள்ளனர்.

பரதாழ்வார் என்ற விவசாயி கொய்யா, எலுமிச்சை ஆகியவற்றை *3* ஏக்கர் பரப்பில் வளர்த்துள்ளார். இவர் *1986-87* முதல் தொடர்ந்து தோட்டக்கலைப் பயிர்களை வளர்த்து வருகிறார். தண்ணீர்ப் பற்றாக்குறை, தொழிலாளர் பிரச்சினை ஆகிய முக்கிய இரண்டு காரணங்களினால் இவர் தோட்டப் பயிர்கள் வளர்க்க ஆரம்பித்ததாகக் கூறினார். முன்னதாக இவர் நெல் சாகுபடி செய்து கொண்டிருந்தார். கிருஷ்ணன் கோயிலில், *1990* வரை தன் நிலத்தைத் தரிசாக வைத்திருந்தவர் தற்போது இத்திட்டத்தினால் தோட்டக் கலைப் பயிர் வளர்த்துப் பயனடைந்துள்ளார். அவர் *1991-92*-இல் தோட்டக் கலைத்துறையின் உதவியுடன் கொய்யாக் கன்றுகளை *50* சதவிகித மானிய விலைக்குப் பெற்று, தரிசாக இருந்த தன் நிலத்தில் பயிர் செய்துள்ளார். தரிசாக இருந்த தன் *4* ஏக்கர் நிலத்தை இத்திட்டத்தினால்தான் தற்போது பயிர் நிலமாக மாற்ற முடிந்தது எனவும் பின்வரும் ஆண்டுகளில் நல்ல வருவாய் பெற முடியும் என்ற நம்பிக்கையையும் இவர் தெரிவித்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே வெங்கடேசபுரம் என்ற இடத்தில் மாநில அரசு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பெரும்பழத் தோட்டம் விவசாயிகளின் தோட்டக் கலைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இங்கு ஒரு திறந்தவெளிக் கிணறு வெட்டவும், சில கன்றுகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு பனித்துளிக்கூடம் அமைக்கவும் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் *1991-92*-ஆம் ஆண்டில் *7.50* இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

> ## தமிழ்
>
> **தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ வகை செய்ய வேண்டும் என்று பாடினார் பாரதி. தரமான தமிழ்ப் புத்தகங்கள் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென ''நேஷனல் புக் டிரஸ்ட்'' பாடுபடுகிறது.**
>
> **வரும் செப்டம்பர் 30-லிருந்து *1993* மே *9* வரை தமிழ்நாட்டில் *32* நகரங்களில் புத்தகக் கண்காட்சிகளை இந்நிறுவனம் நடத்துகிறது. ஒவ்வொரு நகரத்திலும் ஐந்து நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களின் படைப்புகள், இலக்கிய வெளியீடுகள், பிற மொழிகளின் நூல்கள் முதலியன இடம் பெறும்.**

விழுப்பனூரில் ஒரு நபரின் நிலத்தில் மண் அரிப்பைத் தடுக்கவும், மண்வளத்தைப் பாதுகாக்கவும் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் தொடர்ந்தாற்போல் *3* தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. இத்தடுப்பணைகளில் நீர் தேக்கப்படுவதினால் இப்பகுதியில் ஈரப்பதம் பாதுகாக்கப்படுகின்றது. சிங்கம்மாள்புரத்து மலைப்பகுதியில் *7* ஏக்கர் பரப்பிற்குச் சம உயரக் கற்சுவர் கட்டப்பட்டுள்ளது. இக்கற்சுவர் மழைநீர் வழிந்து சாயாமலும், மண்ணை அரித்துச் செல்லாமலும் தடுக்க மிகவும் உபயோகமாய் உள்ளது. இக்கற் சுவர்கள் மண் அரிப்பைத் தடுக்க மிகவும் உபயோகமாய் உள்ளன.

கொக்கன்குளம் காட்டுப் பகுதியில் சமஉயரக் கற்சுவர்களும் தடுப்பு அணைகளும் வண்டல் மண் குளங்களும், மண் அரிப்பைத் தடுக்கும் பொருட்டு கட்டப்பட்டுள்ளன. காடுகள் வளர்த்தல் மூலம் சமச்சீர் நிலை முன்னேற்றம் அடைவதால் இதற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. *50* எக்டேர் பரப்பிற்குப் பனிமர வகையைச் சேர்ந்த காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் நீர்த்தேக்கப் பணிகள் செய்ததின் மூலம் இயற்கை வளங்களான தேக்குப் போன்ற மரங்கள் நன்கு வளர்கின்றன.

காமராசர் மாவட்டத்தில் உள்ள செண்பகத் தோப்பு என்ற இடத்தில் இப்பகுதியில் ஆங்காங்கே பரவலாக வாழும் *22* பழங்குடி குடும்பத்தினருக்கு மலைச் சாதியினர் மேம்பாட்டிற்கென அரசு உதவித் திட்டம் ஒன்று செயல்படுகிறது. இப்பழங்குடி மக்களின் புனர்வாழ்வுக்கு என *8.66* இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்க்கவும், இப்பழங்குடியினர் வசிக்கவும் *6* வீடுகளும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் முசுக்கொட்டைச் செடி வளர்க்க *0.50* ஏக்கர் நிலம் வழங்குதலும் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். தற்போது *13.42* ஏக்கர் நிலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. திறந்தவெளிக் கிணறு ஒன்று வெட்டி முடிக்கப்பட்டுள்ளது. பழங்குடி மக்கள் குடியமர்த்தப்பட்டு, பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

கடந்த ஆண்டுகளில் இத்திட்டம் ஒரு குறிப்பிட்ட முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இதுவரை தரிசாகவும் பயிரிடப்படாமலும் இருந்த நிலங்களில் இத்திட்டத்தின் கீழ் தற்போது பழ மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. முதல் *1992* வரை இப்பகுதியில் பழ மரங்கள் வளர்ப்பு பன்மடங்கு பெருகியுள்ளது எனத் தெரிகிறது. இதுவரை வெங்காயம், மிளகாய், பருத்தி, வேர்க்கடலை, எள் ஆகியவற்றைப் பயிரிட்ட விவசாயிகள் இத்திட்டத்தினால் தற்போது மா, கொய்யா, ஆகியவற்றை மிகுந்த அளவிலும் சப்போட்டா, எலுமிச்சை போன்றவற்றைச் சிறிய அளவிலும் பயிரிடு



கிறார்கள். இத்திட்டம் செயல்படுத்தப்படுவதன் மூலம் பயிர்த் தோட்டங்களின் காட்சிகளில் ஒரு செழுமையான மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

வண்டல் மண் குளங்கள், கசிவுநீர்க் குட்டைகள், சமஉயரக் கற்சுவர்கள், தடுப்பணைகள் ஆகிய பொறியியற் திட்டங்களினால் காடு வளர்த்தல், மண் மற்றும் அதன் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல் ஆகிய வற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இத்திட்டப் பகுதி அடைந்துள்ளது. இப்பகுதி மக்கள் தற்போது உள்ளதைவிட அதிக அளவில் செயல்பட்டால் சமச்சீர் நிலை மேம்பாட்டையும், சமச்சீர் நிலைப் பாதுகாப்பையும் எய்தும் பொருட்டு ஒருங்கிணைந்து செயல்படும் இந்த மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் மேலும் சிறப்பாகச் செயல்படுத்தப்படும். •

# கொள்முதல் செய்யும் நெல்லுக்கு அதிக விலை: மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழ்நாட்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் நெல் ஏகபோகக் கொள்முதல் செய்யப்படும் பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் குறுவை நெல்லுக்குச் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.40 அதிகம் உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்தப் புதிய கொள்முதல் விலை 1.9.92 முதல் அமலுக்கு வரும். அதன்படி சென்ற ஆண்டு ரூ.230 கொள்முதல் செய்யப்பட்ட சாதாரண ரக நெல் தற்போது குவிண்டால் விலை ரூ.270 வீதம் கொள்முதல் செய்யப்படும்.

அதேபோல் ரூ.240-க்கு வாங்கப்பட்ட சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.280 வீதமும், ரூ.250-க்குக் கொள்முதல் செய்யப்பட்ட மிகச் சன்னரக நெல், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.290 வீதமும் இனி, தமிழக அரசு, விவசாயிகளிடமிருந்து வாங்கும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழக அரசின் கொள்முதல் நடைமுறையில் ஏற்கெனவே உள்ள ஏனைய நிபந்தனைகள் சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் இருக்கும். அரசினுடைய ஏகபோக நெல் கொள்முதலுக்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமெனத் தமிழக விவசாயிகளைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

# அவர்தாம் பெரியார்

- பாவேந்தர் பாரதிதாசன்



அவர்தாம் பெரியார் - பார்
அன்புமக்கள் கடலின் மீதில்
அறிவுத் தேக்கம் தங்கத் தேரில் .... (அவர்)

மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு
வஞ்ச கர்க்கோ கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப்பெரும் படையின் தொடுப்பு
.... (அவர்)

தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகுதொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும் .... (அவர்)

தமிழர் தவம்கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும்தலை மேடை
நமக்குத் தாண்டி அந்த வாட்படை
நமை அவரின் போருக் கொப்படை .... (அவர்)

# பழந்தமிழ்த் தலைவர்

- கவியரசு கண்ணதாசன்



கார்கா லத்துக் கறுத்த மேகங்கள்
மண்ணிடைப் பொழியும்மழைபோல் நாட்டில்
சீர்திருத் தத்தைத் திறம்படச் சொன்னவர்
செந்தமிழ் எழுத்தில் திருத்தம் செய்தவர்
மதுவிலக் கென்பதை மனதால் விரும்பி
மனையின் தென்னை மரங்களை வெட்டி,
செயலில் காட்டிய திறமிகு தலைவர்
கடைகளி லிருந்து கதருடைஎடுத்து
தெருவினில் விற்ற தேசியச் செம்மல்
சரியோ தவறோ தனக்குள் பட்டதை
புட்டுப் புட்டுப் புகன்றதோர் நேர்மையர்
எதிர்ப்பில் பிறந்து எதிர்ப்பில் வளர்ந்து
இறுதி வரைக்கும் இயங்கிய சாரணர்
கருத்து மாற்றங்கள் காணினும் அவரை
ஒப்புக் கொண்டனர் ஒவ்வொரு தலைவரும்!
தனக்கென என்று தனிவழி வகுத்து,
வந்தவர் கணக்கோ வாராதவர் கணக்கோ
பாராது சென்ற பழந்தமிழ்த் தலைவர்



# குழந்தைவழி நலக் கல்வித் திட்டத் தொடக்க விழா

குழந்தைவழி நலக் கல்வி பள்ளிக் குழந்தைகள் மூலம் எளிய நலவாழ்வுக் கருத்துகளைச் சமுதாயத்தில் பரப்பும் நலக் கல்வி முறையாகும். இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும் இக்கல்விமுறை வெற்றிகண்டுள்ளது. இந்தியாவில் சென்னையில் இம்முறை சிறந்த பயனளித்து வருகிறது. சென்னை மாநகராட்சி புலியூர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் இத்திட்டத்தை, மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு. இரா.பூர்ண லிங்கம் 25.8.'92 அன்று தொடங்கி வைத்தார்.

''எங்கு மக்கள் ஆரோக்கியமாக நோயில்லாமல் நீண்ட நாள் வாழ்கிறார்களோ, அங்கு மக்கள் அதிக குழந்தைகளைப் பெறுவதில்லை. அங்கு மக்களுடைய வாழ்க்கைத் தரமும் உயர்ந்து காணப்படுகிறது. இது மருத்துவ ரீதியாக நிரூபிக்கப் பட்டுள்ளது. குழந்தைவழி நலக் கல்வி தடுப்பூசிகள் போட்டு நோய் வருமுன் குழந்தைகளைக் காப்பது, வயிற்றுப் போக்குக்கு எளிய மருத்துவம், தன் சுகாதாரம், சுற்றுப்புறச் சுகாதாரம் இவற்றை மக்களிடையே பரப்புவதாகும். குழந்தைகள் மூலம் செய்தி அறிந்தால், அதை மக்கள் எளிதில் உணர்ந்துகொண்டு அதன் படி நடப்பார்கள். எனவே, இத் திட்டத்தில் குடிசைப் பகுதிகளில் வாழும் எழுதப் படிக்க அறியாதவர்கள் .பயன்பெறுகிறார்கள். சென்ற ஆண்டு பத்து பள்ளிகளில் பரீட்சார்த்தமாக இத்திட்டம் செயல் படுத்தப்பட்டது. இத்திட்டம் 30 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படுகிறது'' என்று அவர் தொடக்க உரையில் கூறினார். இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திய 6 மாநகராட்சிப் பள்ளிகளுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

கலைநிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்துப் பேசிய இந்திய மக்கள் தொகைத் திட்ட இயக்குநர் திருமதி தங்கம் சங்கரநாராயணன்; இத் திட்டத்தால் குறிப்பிட்ட பயிற்சி பெற்ற மாணவர்களின் நல அறிவும், அதைப் பிறருக்கு எடுத்துக் கூறும் திறனும் வளர்ந்துள்ளன. பொதுமக்களிடம் இது எந்த அளவிற்கு நன்மை செய்துள்ளது என்பதைக் கண்டறிய விரைவில் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும்' என்று கூறினார். பின்னர் அவர் கொடி அசைத்து, மாணவர் பேரணி ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். பின்னர், ஊர்வலம் அருகில் உள்ள குடிசைப் பகுதிகளுக்குச் சென்று நலக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக்கூறி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நோக்கத்துடன் கலை நிகழ்ச்சிகளை நடத்தியது.

இவ்விழாவிற்கு மாநகராட்சித் துணை ஆணையாளர் திரு. சு.சந்திர மௌலி வரவேற்புரை கூறினார். டாக்டர் ஹைமாபாலச்சந்திரன் திட்டத்தை விளக்கி உரையாற்றினார். டாக்டர் கொடிமணி நன்றி கூறினார். விழாவில் யூனிசெப் உறுப்பினர் திரு. கிறிஸ்டியன் உரையாற்றினார்.




### ரோமானியர் - தமிழர்களின் தொல்லியல் தடயங்கள் - சிறப்புக் கண்காட்சி வழியாக

# ரோமானிய அரும்பொருள் கண்காட்சி

ஏழு மலைகளில் எழுந்துள்ள திருப்பதி திரு நகரம் போன்றே, ஏழு மலைகளில் அமைக்கப்பட்ட மேலோக நகரம் (Eternal City) என்று ரோம் நகரத்தை இன்றளவும் குறிப்பிடுவது வழக்கமாகும். ரோம் நகரம் உலகத்திலேயே சிறந்த நாகரீகக் கவர்ச்சியைக் கொண்ட நகரம் என்றும் போற்றப்படுகிறது. இதைப்போன்றே ரோமானியர் ஆட்சியும் பழமையும் சிறப்பும் கொண்ட ஆட்சியாகும். கி.மு. 753-இல் தோற்றுவிக்கப்பட்டு, சுமார் 700 ஆண்டுகள் வரை குடியரசாகப் பணியாற்றி, பிறகு அகஸ்டஸ் மன்னர் முதல் வல்லரசர்களின் ஆட்சியின் கீழ், சீரும் சிறப்பும் பெற்று உலகத்தின் நாகரீக வளர்ச்சிப் படிகளில் சுமார் 1300 ஆண்டுகள் ஈடுபாடு கொண்டிருந்ததே இப்பெரும் ஆட்சியாகும். ரோமுலஸ் (Romulus) தலைமையில் ரோம் நகரம் உருவாக்கப்பட்டு, கலை, ஓவியம், சிற்பம், கட்டடம், உடற்பயிற்சி, விளையாட்டுகள், போட்டிகள், வியாபாரம், வாணிபம், வங்கிகள், பண்டமாற்று, தொழில் வளர்ச்சி, கல்வி, மொழி, அழகு, பேச்சுவன்மை ஆகிய கலை, கலாச் சாரப் பண்பாடுகளில் சிறப்பாக மேலோங்கி நின்றது என்பது நன்கு தெரிந்ததே. இவையாவும் இன்றளவும் பல நாட்டாரை வசீகரிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இந்த ரோமானிய ஆட்சி மேற்கு ஐரோப்பா முழுமையும், ஆப்பிரிக்காவின் மேற்பகுதி, தென்மேற்கு ஆசியாவின் பகுதிகளை உள்ளடக்கி சுமார் 2,500,000 சதுரமைல் பரப்பளவைக் கொண்டதாக இருந்தது.

ரோமர்களின் சமூக வாழ்க்கையில், செல்வந்தர், நகரத்தார்,

**நே. தேவசகாயம்**
காப்பாட்சியர்
மானிடவியல் பிரிவு
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**பி. இராசமோகன்**
உதவி காப்பாட்சியர்

கிராமத்தார் எனப்படுபவரான இவர்கள் மாளிகைகளிலும், வீட்டு வசதி அடுக்ககங்களிலும், சாதாரண குடிசைகளிலும் முறையே வாழ்ந்து வந்தனர். இவர்கள் பெரும்பாலோர் விவசாயிகளே. கோதுமை, பார்லி, பருப்பு வகைகள், திராட்சை, ஒலிவ எண்ணெய் ஆகியவைகளைச் சாகுபடி செய்தனர். சிலர் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டனர். இலத்தீன் மொழியைக் கற்றனர். மேலும் கிரேக்க மொழி, இலக்கியம், கட்டடக் கலை, சிற்பக்கலை, இவர்களைக் கவர்ந்தது. பாந்தியன் என்று அழைக்கப்படும் சிறப்பு அரைவடிவ கோபுர வளைவுகளையும், கட்டடப் பணிகளிலும் அதிக ஈடுபாடு கொண்டனர். ரோம் நகரத்தில் மக்கள் பாண்ட பானைக்கலையில் சிறந்திருந்தனர். இவர்கள் கடின உழைப்பாளிகள். தங்கள் முயற்சியில் பெற்ற மதுபானம், ஒலிவ எண்ணெய், தங்கள் நாட்டில் காய்ந்த களி மண்ணினால் சுடப்பட்டுச் செய்யப்பட்ட சிறப்புப் பானைகளான சூதுவட்டில் வடிவப் பாண்டங்கள் (Rouletted Pottery), அரிட்டைன்

பாண்டங்கள் (Arretine Pottery), ஆம்போரா இருகை பிடி மது மண் சாடி (Amphorae jars)களை வெளி நாடுகளுக்கு முக்கியமாக இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தனர். மாற்று இறக்குமதியாகத் தானியங்கள், உலோகங்கள், பளிங்கு கல், மெல்லிய நூல் துணிகள், கம்பளம், தந்தம், பட்டு, வாசனைத் திரவியங்களைப் பெற்றனர்.

17-ஆம் நூற்றாண்டில் வாணிபத்தின் வழியே நம்நாட்டிற்கு வந்த ஆங்கிலேயரும், ரோமானியர்களுக்கு இளைத்தவர்கள் அல்ல. அவர்களின் கட்டடக் கலையிலும் ரோம-கிரேக்கரின் சிறப்பியல்புகளைக் கொண்டதாக இருந்தது. சென்னை மாகாணத்தில் சென்னை நகரத்தில் 1789-ஆம் ஆண்டிற்கு முன் பொதுமக்களின் நிதியிலிருந்து உருவாக்கப்பட்டதே எழும்பூரில் எழும்பியுள்ள பாந்தியன் என்று அழைக்கப்பட்ட, இந்நாளில் கம்பீரமாக அரைவட்ட கோபுரங்களுடன் எழில்மிகு காட்சியளிக்கும் அருங்காட்சி வளாகத்தில் காட்சியளிக்கும் அருங்காட்சியகப் பழம் பெரும் கட்டடங்களே ஆகும். இச்சரித்திரமிக்க கட்டடங்களில் தான் 1793-ஆம் ஆண்டில் காரன்வாலீசுக்கும், 1802-ஆம் ஆண்டில், சென்னை ஆளுநர் இராபர்ட் கிளைவிற்கும், 1805-ஆம் ஆண்டில், தளபதி ஜெனரல் ஆர்தர் வெல்லெஸ்லிக்கும், 1807-ஆம் ஆண்டில் ஆளுநர் மெல்விற்கும் வரவேற்பு மற்றும் மரியாதை 'விருந்துகளும் நடைபெற்றன. 1830- ஆம் ஆண்டில் அரசு இக்கட்டடங்களை ரூ.25,000-க்கு வாங்கிச் சிறிது காலம் கழித்து மாவட்ட ஆட்சியரின் அலுவலகமாக பணியாற்றிய பின்பு 1851-ஆம் ஆண்டில் அருங்காட்சியகம் அமைக்கப் பெற்றது. அருங்காட்சியகம் அமைக்க இச்சரித்திரக் கட்டடங்கள் சிறப்பானவைகளே! இக்கட்டட அமைப்புகள், கலைவேலை, கட்டட அமைப்பு ஆகியவை வெளித்தோற்றத்திலிருந்தே இது கிரேக்க-ரோமானிய கலையை தழுவியதாக தெரிய வருகிறது. முக்கியமாக அரைவட்ட வடிவில் அமைந்துள்ள கலை அரங்கின் பகுதி, கன்னிமரா நூலகத்தின் பழமைப்பகுதி, மற்றும் நூற்றாண்டு மண்டபத்தின் ஒரு பகுதியும் பாந்தியன் என்று கூறப்படுகிற கிரேக்க- ரோமானிய கட்டடத்தின் சாயலை உடையதாக இருப்பதை காணலாம்.

இதன் அடிப்படையில், இவ்வித கட்டடத்தில் ரோம அரும்பொருள்



'யவனர்கள்' ஓவியக் காட்சி

களை ஒரு சிறப்புக் கண்காட்சிக்கு அமைத்தல் மிகவும் சிறப்புடையதாகும் என்று எண்ணி, இவ்வருங்காட்சியகமும், சர்.சி.பி. இராமசாமி ஐயர் அறக்கட்டளை, சென்னையும் இணைந்து கடந்த ஆகஸ்ட் மாதம் 10-ஆம் நாள் முதல் செப்டம்பர் 15-ஆம் நாள் வரையில் ரோம தொல்பொருளியல் அரும்பொருள்களும், ரோம நாணயங்களும், நகைகளும் சேர்த்து காட்சிக்கு அமைக்கப்பட்டது. இந்த நூற்றாண்டு கட்டடமும் அதன் உட்புறம் உள்ள சதுரத் தூண்களும் ரோமானிய கட்டட அமைப்பை ஒருவாறு நமக்கு நினைவூட்டுகிறது. இக்காட்சிப் பொருள்கள், ரோமானியருக்கும் தமிழகத்திற்கும் ஏற்பட்ட வாணிப உறவையும், இதர சமூக உறவுகளையும் நமக்கு நினைவூட்டுகிறது. இக்கருத்தை வலுப்படுத்தும் காட்சிப் பொருள்கள் மற்றும் ஆய்வுத் தடயங்கள் முதல் முதலாக சென்னை அருங்காட்சியகத்தினால்தான் கிடைத்துள்ளது என்றால் அது மிகையாகாது.

1939-ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் வெள்ளலூரில் கண்டெடுக்கப்பட்ட புதையலில், மன்னன் அகஸ்டஸ்ஸின் தங்க நாணயங்களும், தங்க நகைகளும் ரோமனியரின் கலைத் தன்மையை நமக்குக் காட்டுகின்றன. இப்புதையலில் கிடைத்த பத்து தங்க நகைகளுள், நான்கு பெரிய மோதிரங்களும், குதிரை உருவம் கொண்ட கார்னீலியன் மோதிரக் கல்லும், கதிர் அரிவாள் போன்ற துண்டும், பூவேலைப்பாடு கொண்ட இரண்டு பாசிகளும், ஒரு தங்கப் பதக்கமும் அடங்கும். சிங்கம், மீன் உருவம் பொறிக்கப்பட்ட மோதிரங்கள் இந்திய பொற்கொல்லரால் செய்யப்பட்டிருக்கலாம். உரோமானிய மகளிர் ஒருவள் ஆடை அணிதலும், கிரேக்கப் போர் வீரனின் உருவம் அல்லது கற்பனை விலங்கு உருவம் ஆகியவை மோதிரங்களில் சித்திரிக்கப்பட்டிருப்பதிலிருந்து இம்மோதிரச்

## சிதார் இசைமேதை இரவிசங்கருக்கு மாக்சேசே விருது

ஆசியாவின் நோபல் பரிசு என்று கருதப்படும் மாக்சேசே விருது சிதார் இசைமேதை இரவி சங்கருக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டிற்கான இந்த விருது இவரது கலைத்திறனுக்காக வழங்கப்படுகிறது. இந்த விருதினை, பிலிப்பைன்ஸ் நாட்டு அதிபர் திரு. பிடல் ராமோஸ் அண்மையில் வழங்கினார்.



உரோம நகைகள்

சித்திரங்களை ரோம் நகரப் பொற் கொல்லர் செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இத்தகைய விரல் மோதிரங்கள் திருமண மோதிரங் களாகவோ அல்லது சிறப்பு நிகழ்ச்சிகளில் பாசத்தையும் நட்பை யும் காட்டும் அடையாளமாகவோ பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

இதைப் போன்றே 1991-ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கோனேரிப்பட்டி கிராமத் தில் புதையலாகப் பெறப்பட்ட ஒரு ஜோடி தங்க கால் தண்டைகள் சிறந்த, நுணுக்க வேலைப்பாடுகள் கொண்டதாக உள்ளன. இது ரோமானியப் பொற்கொல்லரின் தொழில்நுட்பத்துடன் இந்தியப் பொற்கொல்லர்களின் திறமையில் செய்யப்பட்டிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. இதைத் தொடர்ந்து, 1940-ஆம் ஆண்டு பாண்டிச் சேரியை அடுத்த அரிக்கமேட்டில் இவ்வருங்காட்சியக முன்னாள் மானிடவியல் காப்பாட்சியரும், அருங்காட்சியக இயக்குநருமான டாக்டர் எ. ஐயப்பன், பிரெஞ்சு நாட்டுத் தொல்பொருள் வல்லு நருடன் சேர்ந்து அகழாய்வு நடத்தி, கண்ணாடி மணிகள், ரோம்நாட்டுப் பானை ஓடுகள் ஆகியவைகளை இவ்வருங்காட்சியத்திற்குச் சேகரித் தார். இதன் பிறகு தான் முறையான அடுக்குதள அகழாய்வுகளை (Stratigraphical Excavation) சர். மார்ட்டிமெர் வீலர், கசால், விமலா பெக்லி, பேராசிரியர் இராமன் ஆகிய வர்கள் அரிக்கமேட்டில் நடத்தி னார்கள். இவர்கள் ஆய்வினால் சேகரித்த அரும்பொருள்கள் இவ் வருங்காட்சியச் சிறப்புக் கண்காட்சி யில் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவுடன் ரோமாபுரி கொண்டிருந்த வாணிபத் தொடர்பு களைப் பற்றிய செய்திகள் ஸ்டாபோ, பிளினி, தாலமி, பெரிப்புளுஸ் போன்றவர்களின் குறிப்புகளிலிருந் தும், முல்லைப்பாட்டு, சிலப்பதி காரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கிய நூல்களின் வாயிலாக யவனர்களின் (மேற்கு நாட்டவர்) ஆடை, அலங்காரமும், இருப்பிடம், தொழிற்கூடங்களை நாம் ஒருவாறு அறியலாம். ரோம் நகர வணிகர்கள் கி.மு. முதல் நூற்றாண்டில் மத்திய தரைக்கடல் பகுதியிலும் செங்கடல் பகுதியிலும் ஆதிக்கம் செலுத்தி அவ்வழியே, வாணிபத்தை மேற் கொண்டு மேற்குக் கடற்கரைப் பகுதி களில் இறங்கினர். உள்நாட்டின் காடுகள், மலைகள் யாவையும் கடந்து பாலக்கோடு கணவாய் வழி யாகக் கோவையை அடைந்தனர். கோவையில் பெரில் ¬டீஸயலமூ, கிரிஸ்டல் (Crystal) போன்ற சிறப்பு மிக்க கற்களைப் பெற்றனர். அருகி லுள்ள ஈரோடு, ரோமானியர் களுக்கு வேண்டிய இரும்பு, எஃகு மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்தது. யவனர்கள் என்ற பெய ருடன் நமது நாட்டு மக்களுடன் ஒன்றறக் கலந்தனர். பிறகு கோர மாண்டல் கடற்கரைப் பகுதிக்கு வியாபாரத்தில் சென்று அக்கரை யோரமான அரிக்கமேடு, காவிரிப் பூம்பட்டிணம், கரூர், உறையூர், காரைக்காடு (கடலூர் அருகில்), அழகன் கோவில், வாசவசமுத்திரம் (மகாபலிபுரம் அருகில்), காஞ்சி புரம் ஆகிய இடங்களில் தங்களை நிலைப்படுத்தினர்.

வியாபாரத்தின் வழியாக ஈடு பட்ட இவர்கள், தச்சர்களாகவும், கொல்லர்களாகவும், கலை வல்லுநர் களாகவும் காலப்போக்கில் மாறி, தங்கள் கலைத் திறமையைக் காட்ட ஆரம்பித்தனர். திடமாக உள்ள பலர் காவலர்காளகவும், படையில் உதவியாளராகவும் சேர்ந்து இந்திய அரசர்களுக்கு உதவினர். அழகுமிகு யவனப் பெண்டிர் அரண்மனை களில் உதவியாளராகவும், குதிரைப் படையைக் கவனிப்பவராகவும், படையில் வில், அம்புகளைச் சரி பார்ப்பவராகவும் இத்தகைய சிறு சிறு பணிகளில் தங்களையும் இந்திய சமூக அமைப்பில் ஈடுபடுத்திக் கொள்ள முற்பட்டனர். இவைகளை விளக்கும் வகையில், ''யவனர்கள் இந்தியாவில்'', ''ரோமரின் கடற் கரைப் பகுதி'' ''ரோமரின் பானைக் கடை'' ''ரோம் ஆட்சியின் வரலாறு'' போன்ற தலைப்பில் பெரிய அள வில் ஓவியங்கள் வரையப்பட்டு காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அண் மையில் சென்னை அமைந்தகரை அருகில் அரசு அருங்காட்சியகத் தாரால் கண்டுபிடிக்கப்பட்ட மது பானம் வைக்கும் கைப்பிடியில்லாத கூர்மையான மண்சாடி கிடைத் திருப்பது, சென்னை நகரிலும் ரோமரின் கலை மாட்சியை நன்கு காட்டுவதாக உள்ளது. நமது நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப் பட்டு வாணிபம் செழித்திருந்தது என்பதற்குப் புதையலாகக் கிடைத் துள்ள ரோமர், அரேபியர், மற்றும் வெனீசியர் தங்க, வெள்ளி, செப்பு நாணயங்கள் (கி.மு. 1-ஆம் நூற் றாண்டு முதல் - கி.பி. 4- ஆம் நூற்றாண்டு வரை) பரவலாகக் கோவை, திருச்சி, கரூர், மதுரை, அழகன்குளம், தஞ்சை, போன்ற இடங்களில் கிடைத்துள்ளவைகளும் இங்கு காட்சியில் இடம் பெறு கின்றன.

ரோமர்-இந்திய வாணிபத் தொடர்பு, சமூக பண்பாட்டுக் கூறுகள், ரோமாபுரி ஆட்சியின் சரித்திர வரலாறு படிகள், கடற் பயண வழிகள், நம்நாட்டு இயற்கை மூல கனிப் பொருள்கள், இந்திய ரோம ஆய்வு முறை விதிகள், நெறிகள், அகழாய்வுகள், ஆகியவை களை நாமும், நமது மாணவர்களும் நன்கு அறிந்துகொள்ள இந்தச் சிறப்புக் கண்காட்சி உதவும், தொடக்க நிலை முயற்சி அளிக்க, எல்லா விதத்திலும் தூண்டுகோலாக இருக் கும் என நம்புகிறோம். •



# எழுத்தும் தெய்வம் எழுதுகோலும் தெய்வம்!

**ஜி. கணேசன்**

'கத்தி முனையை விட பேனா முனை வலிது' இது வழக்கத்தில் உள்ள பழைய பழமொழி என்றாலும் இன்றளவும் உண்மையே, எழுதும் திறமை, சாமர்த்தியம் இவைகள் ஒருபுறம் இருப் பினும் தரமான எழுதுகோல்கள், மற்றும் எழுத்து உபகரணங்கள் இருந்தால் தான் எழுதுவது சாத் தியப்படும்.

தரமான எழுதுகோல்கள், காகிதங்கள் உப யோகிப்பின் ஒருவருடைய கையெழுத்துக்கூட முன் னேற வழியிருக்கிறது என்று சொன்னால் மிகை யாகாது.

கடைகளில் நாம் பல விதமான எழுதுகோல் களை பார்க்கிறோம்.

இன்று பிரபலமான எழுதுகோல்களாக, பால் பாயிண்டு வகை பேனாக்கள், ஜாட்டர் வகை பேனாக்கள், வரைபடப் பேனாக்கள் (ஸ்கெட்ச் பென்) மற்றும் கறுப்பு லெட் பென்சில் வகை யறாக்கள் உள்ளன.

இன்றைக்குப் பென்சில்கள் பேனாக்களின் உபயோகம் மிக அதிக அளவில் இருப்பதால், தரமுள்ளவைகளாக இவைகள் இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் அடிப்படையில், இந்தியத் தர நிர்ணய அமைவனம் இவ்வகைப் பொருள்களுக்கு தர நியமங்களை உருவாக்கியுள்ளது.

டிராயிங் பென்சில்கள், தச்சர்கள் பென் சில்கள், சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் பத்திரிகை யாளர்கள் உபயோகப்படுத்தும் பென்சில்கள் என்று நான்கு வகையான கருப்பு லெட் (Black Lead) பென்சில்கள் தரத்தினைப் பற்றி எடுத்துச் சொல்வது IS: 1375 - 1981 என்னும் இந்தியத் தர நியமம்.

கருப்பு லெட் பென்சில் வகைகள் கிராபைட் மற்றும் ஒரு வகைக் களிமண் சேர்க்கையால் உருவாக்கப்பட்டு மரத்தினால் செய்யப்பட்ட கூடு போன்ற அமைப்பின் உள்ளே வைக்கப்படுகிறது.

டிராயிங் பென்சில்களில் 13 கீழ்க்கண்ட வகைகள் உண்டு. 6B, 5B, 4B, 2B, B, HB, 2H, 3H, 4H, 5H, & 6H இதில் 'B' என்னும் சொல் மிருதுத் தன்மையினையும், கருமையையும் குறிக்கும் 'H' என்பது பென்சிலின் கடினத்தன்மை. Hardness of the pencils 'HB' வகையறாக்கள் சுருக்கெழுத் தாளர்கள், பத்திரிகை நிருபர்கள் உபயோகத்திற் கானவை.

பொதுவாக எழுத உபயோகப்படும் பென் சில்கள் மூன்று வகையாவன:

அ. Hard (H & 2H) கடினத்தன்மை வாய்ந்தவை.

ஆ) Medium (HB) கடினத்தன்மையுமில்லாமல், மிருதுத் தன்மையுமில்லாமல் நடுத்தரமானவைகள்.

இ) Soft (B & 2B) மிருதுத்தன்மை கொண்டவை.

Corrosion Test, உலோக வகைப் பேனாக் களுக்கு மட்டும் ஸ்பிரிங்குக்கான கம்பிஷன் டெஸ்டு இவை கூறப்பட்டுள்ளன.

இது தவிர, பேனா எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கான பரிசோதனைகளையும் உள்ளடக்கியது இத்தர நியமம். இவைகளையும் தவிர, சீரான உபயோகத்திற்காக கிளிப் ஆக்ஷன் பரிசோதனை, லோட்டெஸ்டு இவைகளும் இந்த IS:3707:1984 தரநியமத்தில் உள்ளடக்கம்.

இதேபோல், IS:10559 - 1983 என்றும் தர நியமம் ஜாட்டர் வகைப் பேனாக்களுக்கு என்று உருவாக்கப்பட்டது.

தேவையான மூலப் பொருள்கள், அளவுகள், மற்றும் நன்றாக எழுத முடிகிறதா என்று கண்டறி யும் சோதனை, நீடித்த தன்மை, ஸ்டார்டின் டெஸ்டு, கிளிப் மற்றும் செயல் திறன் சோதனை துரிதப்படுத்தப்படும். ஏஜிங் சோதனை, பிளேம பிள் சோதனை, பேனாவில் உள்ள ஸ்பிரிங்குக் கான கம்பிரஷன் சோதனை, ஹார்டுனெஸ், கரோஷன் ரெஸிஸ்டன்ஸ், லோட்டெஸ்டு இவை களை உள்ளடக்கியவை.

IS:10560 - 1983 பேனா ரீபில்கள் பற்றியது. என்னும் தர நியமம் ஜாட்டர் பால் IS:10562 - 1983 என்னும் தர நியமம் ஸ்கெட்ச் பேனா.

இவ்வகை ஸ்கெட்ச் பேனாக்களை மாணவர்களும், ஓவியர்களும் உபயோகப்படுத்துகின்றனர்.

உருவகம், அளவுகள் (ஸ்லிப்பின் டையா மீட்டர், ஸ்லிப்பின் பலம், wear of slip, Friction of slip & blackness of pencil marking) இவை சொல்லப்பட்டுள்ளன.

இவை தவிர பென்சிலின் மேல் செய்யப்படும் லாக்கர் பூச்சு (Coating) மற்றும் பென்சிலின் மீது உள்ள எழுத்துக்கள் இரசாயனச் சேர்க்கையால் பதியப்பட்டு இருக்கும்.

அநேக வீட்டில் தொலைபேசிக்கு அருகில் பல பால்பாயிண்ட் பேனாக்கள் வைத்திருப்பார்கள். தொலைபேசியில் வரும் செய்திகளைக் குறிக்க முயலும்போது எந்தப் பேனாவும் எழுதாது. அப்போது நமக்கு ஏற்படும் கோபமும், விரக்தியும் உணர முடியுமே தவிர விவரிக்க முடியாது.

அமைவனம் பால் பாயிண்ட் பேனாக்களுக்கு, பால் பேனா ரீபில்கள் மற்றும் ரீபில்களில் உபயோகப்படுத்தப்படும் மைக்குத் தர நியமங்களை உருவாக்கியுள்ளது.

IS:3705 - 1980 பால் பாயிண்ட் பேனாவுக்கான தர நியமம்.

IS:3707 - 1984 பால் பாயிண்ட் பேனாவுக்கு உபயோகப்படுத்தப்படும் ரீபில்கள்.

IS:5805 - 1970 பால் பாயிண்ட் பேனாவுக்கான மை.

பால் பாயிண்ட் பேனாவுக்கான தர நியமம் 1966-இல் முதன் முதலாக உருவாக்கப்பட்டு 1980-இல் மறுபடி திருத்தியமைக்கப்பட்டது. ஒரு ரீபில் கொண்ட பேனாக்கள், மேசை மீது வைத்துக்கொள்ள உபயோகப்படுத்தும் பேனாக்கள் எல்லாம் இவற்றில் அடக்கம்.

இவ்வகைப் பேனாக்களுக்கு ஒரு மேல் மூடியும் உண்டு. இதனால், ரீபில் மை உலராமல் பாதுகாக்கப்படுகிறது.

பால் பேனாக்கள் தரமுள்ளதா என்று பார்க்க பல பரிசோதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சுவாரஸ்யமான ஒன்று பரிசோதனைக் கருவிகளில் பொருத்தப்பட்ட பால் பேனாக்கள் 500 மீட்டருக்கு மேல் தொடர்ச்சியாகவும் இடைவெளி இல்லாமலும் எந்த இடத்திலும் அதிகமாக மை பரவாமலும் கோடுகள் கிழிக்க வேண்டும். 500 மீட்டர் ஆன பிறகு பேனாக்களின் நுனி சுத்தம் செய்யப்பட்டு மீண்டும் நின்று போகும்வரை இந்தப் பரிசோதனையைத் தொடர வேண்டும். அதுபோல் இன்னும் சில பரிசோதனைகளில் தேறிய பின்பு தான் தரமுள்ளவை என்று நிர்ணயிக்கப்படும்.

பேனா செய்வதற்கான தேவையான மூலப் பொருள்கள் அளவுகள் இவைகள் உள்ளடக்கியது இத் தரநியமம். செயல்திறன் சோதனையின் ஒரு அங்கமான ஸ்டார்டிங் டெஸ்டு, ஸ்மியரிங் டெஸ்டு, கிலிப் ஆக்ஷன் டெஸ்டு, நீள அகலக் குறிகள், எழுதும் தூரம் தடைபடாது எழுதும் திறன் அப்ராஷன், ஹார்டுனெஸ் டெஸ்டு இவைகளைப் பற்றியும் விவரிக்கிறது இந்தத் தரநியமம்.

இப்படியாக பல்வேறு விதமான எழுதுகோல்கள், எழுது பொருள் சாதனங்களுக்குத் தரநியமங்களை நுகர்வோருக்காக அமைவனம் உருவாக்கிக் கொடுத்துள்ளது. இவைகளை எழுதுபொருள் தொழிற்கூடங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி எழுது பொருள்களை மக்களுக்கு அளிக்கச் செய்து எழுத்தும் தெய்வம், எழுதுகோலும் தெய்வம் என்ற ஆன்றோர் வாக்கினைச் செயல்படுத்த வேண்டும். இப்பொருள்களைப் பயன்படுத்துவோர் தரமான பொருள்களையே நாட வேண்டும். எழுத உபயோகிக்கும் உபகரணங்கள் தரமுள்ளவையாக இருந்தால்தான் எழுதுபவரின் கற்பனை வளம் தளராமல், தடங்காமல் இனிமையான சொற்களாக வடிவு பெறும். •

## இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நவீன ஹெலிகாப்டர்

இந்தியா-ஜெர்மனி கூட்டுத் தயாரிப்பில் பெங்களூரிலுள்ள எச்.ஏ.எல். (இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்) நிறுவனம் 4 டன் எடையுள்ள நவீன ஹெலிகாப்டர் விமானம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த நவீன ஹெலி காப்டர் விமானத்தில் 14 பேர் பயணம் செய்ய லாம். மணிக்கு 330 கி.மீ. வேகத்தில் பறக்கும் திறன் கொண்டதாக இந்த விமானம் வடிவமைக் கப்பட்டிருக்கிறது.

இந்த நவீன ரக ஹெலிகாப்டர் விமானத்தை வடிவமைத்து முடிக்க 3 ஆண்டுகள் தேவைப் பட்டது. இந்த புதிய விமானத்துக்கு உலக அள விலான ஏற்றுமதி மார்க்கெட்டில் தனித் தகுதி கிடைக்குமென நம்பப்படுகிறது.

இதன் வெள்ளோட்டத்தினை மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்கள் 30-8-'92 அன்று பெங் களூரில் தொடங்கி வைத்தார்.

# உலகில் உயர்ந்த விருது

உலகில் வாழும் மனிதகுலத்தின் இன்னல்களைக் குறைக்கவும், மக்கள் அமைதியாக வாழும் வகையில் உலகில் ஒரு நல்ல சூழலை உரு வாக்கவும், மனித ஆற்றலை மேம் படுத்தும் வகையிலும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடும் மனிதர் களைக் கண்டறிந்து அவர்களின் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகை யிலும், அவர்களைப் பெருமைப் படுத்தவும் இந்த நூற்றாண்டின் தொடக்க முதலே பல்வேறு வகை யான விருதுகள் உலகம் முழுவதும் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் மாக்சேசே, புலிட்சர் போன்ற விருதுகள் குறிப்பிடத்தக்க வையாகும். ஆனால், இந்த எல்லா விருதுகளிலும் மிக உயர்ந்ததாகப் போற்றப்படுவது 'நோபல்' விருதே ஆகும். இதனாலேயே அதிக எண் ணிக்கையில் நோபல் விருது பெற்ற வர்களைக் கொண்ட நாடுகள் பெருமை கொண்டாடுவதில் சிறி தளவும் வியப்பில்லை.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத் தில் நிறுவப்பட்ட நோபல் பரிசு, இதுவரை பல உயர்ந்த மனிதர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இன, நிற, தேச பாகுபாடின்றி எவ்வித அச்சமோ, சலுகையோ கருதாமல் இந்த விருது வழங்கப்படுவது குறிப் பிடத்தக்கதாகும். மற்ற அனைத்து விருதுகளும் ஒரு குறிப்பிட்ட துறை யில் மட்டும் சிறந்து விளங்கும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் நோபல் பரிசோ மிகப் பெரிய முக்கிய துறைகளில் சிறந்து பணியாற்றியவர்களுக்கு வழங்கப் படுகிறது. மேலும், இந்த விருதுடன் அதிக அளவில் பணமுடிப்பும் அளிக்கப்படுவதும் இந்த விருதின் இன்னொரு சிறப்பம்சம் ஆகும். (1979-இல் உலக அமைதிக்காக நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசாவுக்கு அப்போது 800,000 ஸ்வீடன் குரோனர்கள் (Swedish Kronor) வழங்கப்பட்டது. இன்றைய இந்திய ரூபாய் மதிப்பில் அந்தத் தொகை, ரூபாய் 40 இலட்சங் களுக்குச் சமம். இந்தப் பரிசுத் தொகை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து கொண்டே போகிறது.

நோபல் பரிசு, 'டைனமைட்' (Dynamite) என்ற வெடிபொருளைக் கண்டுபிடித்த பிரபல விஞ்ஞானி ஆல்பிரட் நோபல் அவர்களின் நினைவாக உருவாக்கப்பட்டது. இவர் ஒரு இரசாயனப் பொறி யாளர். இவர் தாம் கண்டுபிடித்த டைனமைட் என்ற வெடி பொரு ளால் விளையக்கூடிய ஆபத்தைக் கருத்தில் கொண்டு, மனிதகுல மேம் பாட்டிற்குத் தம்மால் இயன்றதைச் செய்ய எண்ணி, தாம் இறப்பதற்கு முன் எழுதப்பட்ட உயிலில் தம்மால் வங்கியில் சேமித்து வைக்கப்பட்ட 8,960,000 டாலர்களுக்குக் கிடைக் கக் கூடிய வட்டித் தொகையை பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், சமாதானம் போன்ற ஐந்து துறைகளில் சிறந்து பணி யாற்றியவர்களுக்கு வழங்குமாறு கூறியிருந்தார். இத்துடன் 1969-இல் ஸ்வீடன் வங்கி பொருளாதாரத் துறையிலும் சிறந்து பணியாற்றுபவர் களுக்கு விருது வழங்க வேண்டு மென்று கருதி அதற்குண்டான பரிசுத் தொகையை நோபல் அறக் கட்டளைக்கு வழங்கியது. இதையும் சேர்த்து மொத்தம் ஆறு துறைகளில் சிறந்து பணியாற்றுபவர்களுக்கு இந்த நோபல் பரிசு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஆல்பிரட் நோபல் அவர்கள் மறைந்த தின மான டிசம்பர் 10-ஆம் தேதியன்று இந்த விருதுகள் வழங்கப்படுகின் றன. நோபல் விருது உருவாக்கப் பட்டு இதுநாள் வரை மேற்கண்ட ஆறு துறைகளில் சிறந்து விளங்கிய பல அறிஞர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் சில:-

நோபல் விருது 1901-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**முதன் முதலில் நோபல் பரிசு பெற்றவர்கள்**

பௌதிகம் - ரான்ட்ஜன்
இரசாயனம் - ஜேகோபஸ் வான்ட் ஹாப்
மருத்துவம் - எமில் வான் பேரிங்
இலக்கியம் - சல்லி புருடோம்
உலக சமாதானம் - ஹென்ரி டுனாண்ட் மற்றும் பிரெடெரிக் பாஸ்லி

பொருளாதாரம் - 1969-இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த விருது முதன் முதலில் ரக்னார் பிரிஸ்க் மற்றும் ஜான் டின்பெர்ஜென் ஆகிய இருவருக்கும் கூட்டாக வழங்கப் பட்டது.



விலங்குகளில் உயர்ந்தது சிங்கம். அதைப் போல, மனிதர்களில் சிறந்தவன் சிறந்த சிந்தனை யாளன்.

- தந்தை பெரியார்.

நோபல் பரிசு பெற்றவர்களில் வயது முதிர்ந்தவர் பிடன் ரோவஸ்.

1966-ஆம் ஆண்டிற்கான மருத்துவத்துறை நோபல் பரிசு தமது 87- ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டது. இதேபோல் குறைந்த வயதில் நோபல் பரிசு பெற்றவர் வில்லியம் லாரென்ஸ் பிராக். பௌதிகத்தில் இவரின் புதிய கண்டுபிடிப்புக்காக இவருக்கு 1915-இல் 25-வது வயதில் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்த விருது இவருடைய தந்தை சர் வில்லியம்ஹென்றி பிராக் உடன் சேர்த்து கூட்டாக இவருக்கு வழங்கப் பட்டது. நோபல் பரிசு வரலாற்றி லேயே தந்தையும் மகனும் சேர்ந்து நோபல் பரிசு பெறுவது இதுவே முதல் தடவையாகும். நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி மேரி கியூரி. கதிர்வீச்சு கண்டுபிடிப்புக் காக இவருக்கு 1903-ஆம் ஆண்டு இவருடைய கணவர் பியரி மற்றும் ஹென்ரி பெக்கொர்ரல் ஆகியோரு டன் இணைந்து இந்த விருது வழங்கப்பட்டது.

இந்தியாவில் அதுவும் குறிப்பாக ஆசியாவிலேயே முதன் முதலில் நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமை, ரவீந்தர் நாத் தாகூர் அவர்களைச் சாரும். இவருக்கு 1913-இல் இலக்கியத்திற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதையடுத்து சுமார் 55 ஆண்டு களுக்குப் பின்னர்தான் இலக்கியத் துக்கான நோபல் பரிசு ஆசியா கண்டத்துக்குக் கிடைத்திருக்கிறது.

**நோபல் பரிசு பெற்ற மற்ற இந்தியர்கள்**

சர். சி.வி. இராமன் - பௌதிகம் *(1930)*

அன்னை தெரசா - உலகச் சமாதானம் *(1979)*

ஹர் கோபிந்த கொரானா - மருத்துவம் *(1968)*

எஸ். சந்திரசேகர் - பௌதிகம் *(1983)*

(இவர் சர். சி.வி. இராமனின் நெருங்கிய உறவினர் என்பது குறிப் பிடத்தக்கதாகும்.)

இரண்டாவது முறை நோபல் பரிசு பெறும் முதல் விஞ்ஞானி, மேரி கியூரி. இவர் 1903-இல் முதன் முதலாக பௌதிகத் துறை யில் நோபல் பரிசு பெற்றார். பின்னர் ரேடியம் மற்றும் பொலோ னியம் கண்டுபிடிப்புக்காக இரசா யனத் துறைக்கான நோபல் பரிசு 1911-இல் இவருக்கு இரண்டாவது முறையாக வழங்கப்பட்டது.

பௌதிகத் துறையில் இந்த் நூற்றாண்டின் மிகப் பெரிய கண்டு பிடிப்புக்காக ஜான் பர்டீன் என்ப வருக்கு 1956 மற்றும் 1972-இல் கூட்டாக நோபல் பரிசு வழங்கப் பட்டது.

இத்தனை சிறப்புகளையும் பெற்ற நோபல் பரிசுகளைப் பெற உலக அளவில் கடும் போட்டியிருந் தாலும் சிலர் இந்த விருதினை உயர்வாகக் கருதுவதில்லை. 1964-ல் இலக்கியத்துக்காகத் தமக்கு வழங்கப் பட்ட விருதினை ஜீன்பால் சாட்ரே என்பவர் ஒதுக்கிவிட்டார். ஜார்ஜ் பெர்னாட்ஷா தமக்களிக்கப்பட்ட விருதினை (1925) விமர்சித்துப் பேசினரர். போரிஸ் பேஸ்டர்நாக் என்பவர் 1964-இல் தமக்கு வழங் கப்பட்ட நோபல் விருதினைப் பெற மறுத்துவிட்டார்.

விஞ்ஞானத் துறைகளில் வழங் கப்படும் நோபல் பரிசு இந்தத் துறைகளில் மேன்மேலும் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பச் சாதனை களுக்கு ஊக்கமளிக்கும். அதே நேரத் தில் சமாதானப் பரிசு அன்பு மற்றும் சகோதரத்தன்மையை உலகில் பரப் பப் பெரிதும் துணைபுரியும் என் பதில் ஐயமில்லை.

**நன்றி: 'ஹிந்து'**

## பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுக்கான இலவசப் பயிற்சி

தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சென்னையிலுள்ள தனிப்பயிற்சி நிலையத்தில், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

இப்பயிற்சியில் சேருவதற்கு தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முதுகலைப் பட்டதாரிகள், தொழிற்கல்வியில் இளநிலைப் பட்டதாரிகள், ஆண்டு வருமானம் ரூ.24,000-க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்களாக இருத்தல் வேண்டும்.

ஜூன் 1993-இல் நடைபெறவிருக்கும் பூர் வாங்கத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் இவ் வாண்டு செப்டம்பரில் தொடங்கி ஜூன் 1993 வரை சென்னையில் நடைபெறும். இந்தப்பயிற்சி வகுப்புகள் கோவை, அண்ணாமலைநகர், காந்தி கிராமம், காரைக்குடி, பாளையங்கோட்டை ஆகிய மையங்களிலும் நடைபெறும்.

நவம்பர் 1992-இல் நடைபெறவிருக்கும் இறுதித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் சென்னை யில் நடைபெறும். மேற்கூறிய தகுதியுடைய, பூர் வாங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களிட மிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேலும், விவரங்களுக்கு, இரண்டு ரூபாய் தபால்தலை ஒட்டிய சுயமுகவரி எழுதிய உறை யுடன் (9.செ.மீ., 27 செ.மீ.) முதல்வர், தனிப் பயிற்சி நிலையம், 12-வது பிரதான சாலை, இரண்டாம் அவின்யு, அண்ணாநகர் மேற்கு, சென்னை-600 040 என்ற முகவரிக்குத் தபால் மூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்ளலாம் என, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல இயக்குநரிடமிருந்து வந்த செய்திக் குறிப்பு கூறுகிறது.



# குடிப்பழக்கத்தால் வரும் கேடு

விடியாத பொழுதென்பர் குடிகாரன் வீடு
வேதனைக்கு விளைநிலமாய் விளங்குபவன் நெஞ்சம்
படியாத பேர்களுக்கும் பரிமளிக்கும் வாழ்வு
பண்பான சிறப்புடனே அன்புமிகுந் தோங்கும்
குடியேறிப் போகும்தினம் குடிப்பவரின் அறிவு
கொள்கைஉயர் குணத்தைக்குடி, குழிதோண்டிப் புதைக்கும்
அடிமைக்கு அடிமை என அடைக்கலமே செய்யும்
அற்பத்தனம் தீதனைத்தும் ஆட்சிதனைப் புரியும்

பேதைமையைக் குடிப்பழக்கம் மேதைஎனக் காட்டும்
பித்தர்நிலை அத்தனையும் சொத்தாக நினைக்கும்
வேதனையை அன்றாடம் வலைவிரித்துப் பிடிக்கும்
விரும்பாத தீமைகளைக் கரும்பாகச் சுவைக்கும்
பாதகத்தின் செயல்புரிய காதல்மிகக் கொள்ளும்
பச்சோந்தி போலறிவைப் பலவிதமாய் மாற்றும்
வேதமொழி எனக்கூறி, தீமைகளை விளைக்கும்
விளையாட்டுப் பிள்ளையைப்போல் தெருக்கூட்டி நடிக்கும்

இடிபோன்ற கேடுகளை அடிபணிந்து ஏற்கும்
இசையென்றே தீமொழியில் வசைபாடி மகிழும்
முடிகொண்ட மன்னனைப்போல் குடிகளிடை காட்டும்
முன்னோர்கள் படைத்துவைத்த பானமென்றே குடிக்கும்
அடியோடு செல்வச்சிறப் பழிந்திடினும் உள்ளம்
அச்சமின்றி மதுக்கடை கூத் தரங்கமென்றே நினைக்கும்
படிந்திட்ட உலகமெலாம் குடிப்பழக்கம் மிகுந்தோர்
பகுத்தறிவைப் பறிகொடுத்துப் பரதவிப்பார் உலகே.

கடன்பட்டுத் துயரனைத்தும் விலைகொடுத்து வாங்கத்
தயங்காது மயங்காது களிப்பில்வர வேற்கும்
உடன்பிறப்பு சுற்றத்தார் உயர்குடும்பம் அனைத்தும்
உற்றதுணை தாய்வெறுக்க ஊரின்பகை தேடும்
தடம்புரண்ட மலையேறும் வண்டியைப்போல் வீழ்ந்து
தக்கதுணை இன்றி,குடி தவித்திடவே செய்யும்
மடமைதனை மணம்புரிந்து குடித்தனமே பண்ணும்
மதுவாலே வாழ்விழந்த மாந்தர்பல கோடி...!

புலவர் சி. துரைசுவாமி



வளரும் வேளாண்மை:

# மா மரத்தைத் தாக்கும் பச்சை முட்புழு அல்லது எரிப்பூச்சிகள்

**மா** மரத்தைத் தாக்கும் பூச்சிகளுள் எரிப்பூச்சிகள் அல்லது பச்சை முட் புழுக்களும் ஒன்று. பச்சை நிறமுள்ள இப்புழுக்களின் உடலில் முள் போன்ற அவயவங்கள் இருப்பதைக் காணலாம். இந்த முள் போன்ற அவயவங்களில் நச்சுப் பொருள் சேர்ந்திருப்பதால் இவை நம் உடலில் பட்டால் எரிச்சலும் அரிப்பும் ஏற்படும். அதனால் இப் புழுக்கள் எரிப்பூச்சிகள் என்று அழைக்கப்படுகின்றன.

அந்துப் பூச்சிகளின் பச்சை நிற முன்னிறக்கையில் குறுக்காகப் பழுப்புநிறப் பட்டைகளோடு இருக்கும். பெண் அந்துகள் இருபது முதல் முப்பது முட்டைகள் வரை இலைகளின் அடிப்பரப்பில் குவியலாக இடுகின்றன. முட்டைகள் தட்டையாக, மினுமினுப்புடன் இருக்கும். புழுக்கள் தடித்தும் உடலின் அடிப்பகுதி தட்டையாகவும் மேற்பகுதி குவிந்தும் இருக்கும். புழுவின் உடலில் வெண்ணிற நீண்ட கோடுகள் காணப்படும். மார்புப்பகுதி கால்கள் நன்கு வளர்ச்சியடைந்தும் மற்ற வயிற்றுக்கால்கள் வளர்ச்சி குறைந்தும் இருப்பதால் புழுக்கள் நத்தையைப்போல மெல்ல நகருகின்றன. கூட்டுப்புழுக்கள் அரைவட்ட வடிவில் கடினமான உறையிலும் காணப்படும். கூட்டுப் புழுக்களை மரத்தின் பட்டைகளிலும், மரத்தின் கிளைகளிலும் காணலாம்.

புழுக்கள் தளிர் இலைகளை உண்டு சேதம் விளைவிக்கின்றன. இப்புழுக்கள் 'மா' தவிர ஆமணக்கையும் தாக்குகின்றன.

**பூச்சி நிர்வாகம்**

★ விளக்குப் பொறிகளை மாந்தோப்பின் நடுப்பகுதியில் அமைத்து, அதன்மூலம் அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

★ முட்டைக்குவியலையும், புழுக்களையும் சேகரித்து அழிக்கலாம்.

★ மருந்தடிக்கும் முன்னர் மரத்திலுள்ள கூட்டுப்புழுக்களைக் கூரிய இரும்புக்குச்சி கொண்டு குத்தி அழித்தல் நல்லது.

★ எண்டோசல்பான் ஒரு லிட்டர் நீருக்கு இரண்டு மில்லி அல்லது டைக்குளோர்வாஸ் ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மி.லிட்டர் என்ற அளவில் தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.



## கோடைப் பருவப் பயறுவகைகளுக்கு டிஏபி தெளிப்பு

**கோ**டைப் பருவத்தில் பயிரிடப் பட்டுள்ள உளுந்து மற்றும் பாசிப் பயறு போன்ற பயிர்களுக்கு இரண்டு சத டிஏபி கரைசல் தெளித்து அதிக மகசூல் பெறலாம். ஒரு ஏக்கருக்குத் தேவையான நான்கு கிலோ டிஏபி-ஐ இருநூறு லிட்டர் தண்ணீரில் முதல் நாள் மாலை நன்கு ஊறவைத்து, நன்கு மரக்கழி கொண்டு கலக்கிடவேண்டும். பின்பு, மறுநாள் காலை தெளிந்த - மேலே தங்கியுள்ள நீரை மட்டும் எடுத்துக்கொண்டு கீழே படிந்துள்ள படிமத்தை நீக்கி விடவேண்டும். கைத்தெளிப்பானால் இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

விதைத்த இருபது மற்றும் நாற்பது ஆவது நாட்களில் டிஏபி கரைசல் தெளிக்கவேண்டும். இவ்வாறு தெளிப்பதால் தரமான விதைகளும், அதிக மகசூலும் அதிக இலாபமும் பெறலாம். டிஏபி தெளிப்பதால் ஒரு ஏக்கருக்கு ஆகும் செலவு ஐம்பது ரூபாய் மட்டுமே. ஆனால் அதிக மகசூல் கிடைப்பதால் இலாபமாக ரூபாய் இருநூறு கிடைக்கிறது.

**வெளியீடு:**
**வேளாண் தகவல் பணி மையம்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோவை-3.**




# நாட்டின் முன்னேற்றத்தில் இரயில்வேயின் பங்கு

நமது நாட்டின் பொருளாதார, தொழில் மற்றும் சமூக மேம்பாட்டில் இரயில்வேத் துறையின் பங்கும் மிக முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மிக வேகமாக மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஈடுகொடுக்கும் வகையில் இரயில்வேயும் அவ்வப்போது திட்டங்களைத் தீட்டி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு வருகிறது.

நாட்டில் இரயில் போக்குவரத்து மூலம் இணைக்கப்படாத பகுதிகளைக் கண்டறிந்து அந்த இடங்களுக்கு இரயில் போக்குவரத்து வசதிகளைச் செய்து தருவதில் இத்துறை ஈடுபட்டுள்ளது. நாட்டின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இரயில்வேயும் தனதுபணியை ஓரளவுக்குத்தான் நிற்றவேற்ற முடிகிறது.

இந்தியாவில் தற்சமயம் சுமார் 24 ஆயிரம் கி.மீ. தூரத்துக்குக் குறுகிய இரயில் பாதை (Metre Gauge Network) இருக்கிறது. இந்தப் பாதையில் பயணிகள் மற்றும் வியாபாரப் போக்குவர்த்து கடந்த ஆண்டுகளில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் அடையவில்லை. தற்சமயம் இரயில் மூலம் நடைபெறும் சரக்குப் போக்குவரத்தில் சுமார் 9 சதவிகித அளவுக்கே இந்த குறுகிய இரயில் பாதை மூலம் நடைபெறுகிறது. இதைப்போலவே மொத்த இரயில் பயணிகளில் 20 சதவிகிதத்துக்கும் குறைவாகத்தான் இந்த குறுகிய இரயில் பாதையில் பயணம் செய்கிறார்கள்.

இதைக் கருத்தில் கொண்டுதான், நாட்டிலுள்ள அனைத்துக் குறுகிய இரயில் பாதைகளையும் அகல இரயில் பாதையாக மாற்ற இரயில்வே திட்டமிட்டு, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் சுமார் 327 கி.மீ. தூர குறுகிய இரயில்பாதை அகல இரயில் பாதையாக மாற்றப்பட்டது. எட்டாவது திட்ட காலத்தில் சுமார் 6,000 கி.மீ. தூர குறுகிய இரயில் பாதையை அகல ரயில்பாதையாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அகல இரயில்பாதை மாற்றுத் திட்டத்தின் மூலம் தொழில் மற்றும் வர்த்தகத் துறையினரே மிகுதியாகப் பயனடையவிருப்பதால் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியுதவியை இவர்களும் பகிர்ந்து கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது.

### மின்சக்தி

நாட்டின் தற்போதைய மின்சக்தி உற்பத்தித் திறன் 71,000 மில்லியன் வாட். இதைப்போல இருமடங்குத் திறன் அடுத்த 15 ஆண்டுகளுக்குள் (2006-07) தேவைப்படும். அதை உற்பத்தி செய்து எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கு ரூ.6,00,000 கோடி முதலீடு தேவைப்படும்!

புனல்மின் திட்டங்கள் மூலம் 84,000 மில்லியன் வாட் மின்சக்தி உற்பத்தி செய்ய இயலும். எனினும் இதில் 20 சதவிகிதமே தற்போது உற்பத்தியாகிறது. பயன்படக்கூடிய நீரில் 75 சதவிகிதம் வீணாகக் கடலில் கலந்து விடுகிறது. இதைப் பயன்படுத்தி, ஆண்டொன்றுக்கு 48,000 கோடி ரூபாய் மதிப்புள்ள மின்சக்தியை உற்பத்தி செய்யலாம்!

மின்சக்தி பயன்படாத துறையே இல்லை எனலாம். தொழில் துறை - 40.9 சதவிகிதம், வீட்டு உபயோகம்- 32.6 சதவிகிதம், வேளாண் துறை - 13.9 சதவிகிதம், வர்த்தகம் - 5.7 சதவிகிதம், இரயில்வேத் துறை - 2.2 சதவிகிதம், ஏனைய துறைகள் - 4.7 சதவிகிதம். இந்த வகையில் மின்சக்தி பயன்படுத்தப்படுகிறது.

எரிசக்தி சிக்கனம், சேமிப்பு மூலம் 2006-07-ஆம் ஆண்டில் மின்சக்திப் பயன்பாடு 14 சத விகிதம் வரை குறையக் கூடும்.

### மின்சார இரயில் பாதை:

இரயில் பாதையை மின் மயமாக்கும் திட்டம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,800 கி.மீ. தூரத்துக்கும் சற்றுக் கூடுதலாக இரயில் பாதை மின்மயமாக்கப்பட்டது. எட்டாவது திட்ட காலத்தில் சுமார் 4,000 கி.மீ. தூர பாதையை மின்மயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டில் குறைந்து வரும் எண்ணெய் வளங்களை மிச்சப்படுத்துவதோடு, இரயில் பயணங்களைத்துரிதப்படுத்தவும், இந்தத் திட்டம் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

—பத்திரிகை தகவல் அலுவலகம்

# திண்டுக்கல்-அண்ணா மாவட்ட வளர்ச்சிப் பணிகள்



மதுரை மாவட்டத்தில் இருந்து திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் 15.9.85-இல் தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டபின், இம்மாவட்டத் தொழில் வளர்ச்சி 1.8.86 முதல் மாவட்டத் தொழில் மையம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

1.8.86 அன்று இம் மாவட்டத் தொழில் மையத்தில் பதிவு செய்யப் பட்டிருந்த சிறு தொழில்களின் எண்ணிக்கை 677. பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 16. இதன்மூலம், முறையே 5,460 மற்றும் 3,560 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இம்மாவட்டத் தொழில் மையத்தின் சீரிய முயற்சியிலும், தமிழக அரசு புதிய சலுகைகளையும், மானியங்களையும் கொடுக்க ஆரம்பித்ததன் பயனாலும், இன்று 2,814 சிறு தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன்மூலம் 15,706 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். அதேபோல் 51 பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் மூலம் 9,605 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இம்மையத்தின் சிறப்புப் பணிகள் மற்றும் வட்டார அளவில் நடத்தப் பட்ட தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் மூலமாக, இத்தகைய தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதில் தொழில் முனைவோரின் பங்கும் உண்டு.

திண்டுக்கல் வட்டம் பூட்டுத் தொழிலுக்கும், தோல் பதனிடுவதற்கும் புகழ் பெற்றதாகும். ஏறத்தாழ 150 பூட்டுத் தொழிற்சாலைகளுக்கும் மேலாக இங்கு உள்ளன. இவற்றில் தயாராகும் பூட்டுகள் நல்ல தரமுள்ளவைகளாக இருந்தாலும், தற்கால விஞ்ஞான அடிப்படையில் தயாரிக்கப்படுவதில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, இந்தியத் தொழில் வளர்ச்சி நிறுவனம், சென்னை இன்காட் நிறுவனத்தின் உதவியுடன் ஆய்வு நடத்தியதன் அடிப்படையில், திண்டுக்கல்லுக்கு அருகில் உள்ள நல்லாம்பட்டி கிராமத்தில் பூட்டுகள் தயாரிக்கும் ஒரு சங்கத்தைத் தொடங்க, சென்னை இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் பேங்க் ஆப் இந்தியா ரூபாய் 2,40,000 வழங்கியுள்ளது. இந் நிறுவனம் விரைவில் செயல்பட உள்ளது.

இதே போல், தோல் தொழிலை நவீனப்படுத்தவும், தோல் பொருள் தயாரிப்பதற்குத் தேவையான தோல் பதனிடப்படவும், ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கம் தோற்றுவிக்கப் பட்டு, அதில் தற்கால விஞ்ஞானத் தொழில் நுட்பப்படி தோல் பதனிட; சிறிய தொழிற்சாலைகளுக்கு உதவி செய்து வருகிறது.

புதிய தொழில்களை அதிக அளவில் தொடங்க தொழில் முனைவோர்களைக் கண்டறியவும், அவர்களை ஊக்கப்படுத்தவும் மாதந் தோறும் ஊராட்சி ஒன்றியங்களில்

தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சிறு தொழில் பதிவுக்கும், அதன்பின் நிதியுதவி பெறுவதற்கு வழிவகையும் செய்யப்படுகிறது. அரசு வழங்கி வரும், மானியங்கள் நிதி மற்றும் சலுகைகள் பற்றி விளக்கி இலவச ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

அரசின் புதிய தொழில் கொள்கையின்படி, இம்மாவட்டத்தில் உள்ள வேடசந்தூர், கொடைக்கானல் வட்டங்கள் மிகவும் பின் தங்கிய வட்டங்களாகவும், நத்தம், நிலக்கோட்டை வட்டங்கள் பின் தங்கிய வட்டங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. மிகவும் பின்தங்கிய வட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழில்களுக்கு முதலீட்டு மானியமாக 20 சதவிகிதம் வரை (அதிகப் பட்சம் 20 இலட்சம் வரை) மானியம் வழங்கப்படுகிறது.

பின்தங்கிய வட்டங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு 15 சதவிகிதம் முதலீட்டு மானிய

## இலவச மருத்துவ முகாம் நிறைவு

**திண்டுக்கல்**-அண்ணா மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பிறந்த நாள் விழாவினையொட்டி, புதுநலத் திட்ட இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

கிராமப் பகுதிகளில் 311 முகாம்களும், நகரப் பகுதிகளில் 20 முகாம்களும் நடத்தப்பட்டன. 331 முகாம்களில் 2 இலட்சத்து 18 ஆயிரத்து 390 நபர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். இதில் 34 ஆயிரத்து 727 நபர்கள், நல்ல உடல்நலம் உள்ளவர்களாக பரிசோதனைக்குப்பின் தெரியவந்தது. உடல் கோளாறு உள்ள 2 இலட்சத்து ஓராயிரத்து 751 நபர்களில் பரிசோதனைக்குப்பின் 38 ஆயிரத்து 185 நபர்களுக்குச் சுவாசம் தொடர்பான நோய்களும், 27 ஆயிரத்து 226 நபர்களுக்கு உணவுக் குழாயில் நோய் உடையவர்களாகவும், 26 ஆயிரத்து 136 நபர்கள் கண் நோய் தொடர்புடையவர்களாகவும், 14 ஆயிரத்து 602 நபர்கள் காது, மூக்கு, தொண்டை தொடர்பான நோய் உடையவர்களாகவும், 12 ஆயிரத்து 689 நபர்கள் பிரசவ உறுப்புகளில் கோளாறு உடையவர்களாகவும் கண்டுபிடிக்கப்பட்டது.

26 ஆயிரத்து 129 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது. 21 ஆயிரத்து 83 நபர்களுக்கு சிறுநீர்ப் பரிசோதனையும், 3 ஆயிரத்து 26 நபர்களுக்குச் சளி தொடர்பான பரிசோதனையும் முகாமின் மூலம் செய்யப்பட்டது.

**18 ஆயிரத்து 548 குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு, 7 ஆயிரத்து 71 குழந்தைகளுக்கு எடை அளவு மற்றும் பரிசோதனையும் செய்யப்பட்டது.**

இப்பரிசோதனையின்போது, மேலும் பரிசோதித்து, உரிய மருத்துவ வசதிபெற அரசினர் தலைமை மருத்துவமனைக்கு 6 ஆயிரத்து 518 நபர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

முகாம்களில் பரிசோதனை செய்யப்பட்ட அனைவருக்கும் மருத்துவ அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் அருகில் உள்ள வட்டம் மற்றும் மாவட்ட அரசு மருத்துவமனையில் அட்டைகளைக் காண்பித்து சிகிச்சை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியை அரசு செய்துள்ளது.

ஒவ்வொரு முகாம்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், வட்ட அரசு மருத்துவமனை, பழனியில் உள்ள மாவட்ட அரசு மருத்துவமனை, திண்டுக்கல்லில் உள்ள தலைமை அரசு மருத்துவமனை டாக்டர்கள் பங்குகொண்டனர். பரிசோதனைக்குப் பிறகு மருந்து வகைகள் வழங்கப்பட்டன.

திண்டுக்கல் தலைமையிடத்து அரசு மருத்துவமனையின் இணை இயக்குநர் திரு. அனந்தகிருஷ்ணன், மாவட்டத் துணை இயக்குநர்கள் திரு. சந்திரசேகரன், திரு. பழனி ஆகியோர் மேற்பார்வையில் டாக்டர்கள் குழு பரிசோதனை செய்தனர்.

**கே.பி. நல்லதம்பி,**
**உதவி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.**



மாக அதிகப் பட்சம் 15 இலட்சம் வரை கொடுக்கப்படுகிறது. இந்நிறுவனங்களில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதில் விற்பனை வரி தள்ளுபடியும் விற்பனை வரி தள்ளிவைப்பும், முதல் 9 ஆண்டுகளுக்கு 100 சதவிகிதம் முதலீட்டு அளவிற்குச் செய்யப்படுகிறது. இந்தத் தள்ளிவைப்பு வரியை மறு 9 ஆண்டுகளில் வட்டியின்றிச் செலுத்தலாம். மேலும், 15 சதவிகிதம் அளவு விரிவுபடுத்தும் தொழிலகங்களுக்கும் மேற்படி சலுகைகள் வழங்கப்படுகின்றன.

மிகவும் பின்தங்கிய அல்லது பின்தங்கிய பகுதி அல்லாத இடங்களில் சில குறிப்பிட்ட பொருள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள், அதன் நிலையான முதலீட்டில் 20 சதவிகிதம் அதிகப் பட்சமாக 20 இலட்சம் வரை மானிய உதவிகள் பெறத் தகுதியுள்ளவை.

20.1.92-க்குப் பிறகு தொடங்கப்பட்ட புதிய தொழிற்சாலைகளுக்கு மின் மானியம் முதல் ஆண்டில் 40 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டில் 30 சதவிகிதமும், மூன்றாம் ஆண்டில் 20 சதவிகிதமும் பெறலாம். மற்றும் சில குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தவிர மற்ற சிறு தொழில் நிறுவனங்கள் புதிய ஜெனரேட்டர் வாங்கிய தொகையில் 15 சதவிகிதமும் (அதிகப்படியாக 5 இலட்சம்) மானிய உதவி பெறலாம்.

திண்டுக்கல், வேடசந்தூர் பழனி வட்டங்களில் அதிக அளவிலான நூற்பாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்நூற்பாலைகளைச் சேர்ந்த துணைத் தொழில்களான விசைத்தறித் தொழில் நூல் முறுக்குதல், நூல் இரட்டிப்பாக்குதல், சைசிங் மற்றும் வைண்டிங் தொழில்கள் வரை வாய்ப்புள்ளது. தற்போது ஒட்டன்சத்திரம் பகுதியில் 200 விசைத்தறிகள் தொடங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

வரும் மாதங்களில் மேலும் சுமார் 200 விசைத்தறிகள் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் நான்கு இரும்பு உருக்காலைகள் தொடங்கப்பட்டு, சென்னை இரயில்வே இணைப்புப் பெட்டித் தொழிற்சாலைக்கும், மின்வாரியத்திற்குத் தேவையான உபகரணங்கள் உற்பத்தி செய்து அனுப்பி உதவி புரிகின்றன. இம்மாவட்டத்தில் மாம்பழம், புளி, தக்காளி, கமலா ஆரஞ்சு, பேரிக்காய் அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது. இவற்றைப் பயன்படுத்தி புதிய தொழிற்சாலைகள் தொடங்க வாய்ப்பும் வசதியும் உள்ளன.

புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்குத் தேவையான உரிமங்கள் ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, பேரூராட்சி அலுவலகங்கள், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலம், சுகாதாரத் துறை முதலியவற்றில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட ஒரு முனைத் தீர்வுக்குழுக் கூட்டத்தில் விவாதித்து, தாமதமில்லாமல் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

தமிழக அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் வசதி வளர்ச்சி நிறுவனம் (TACID) மூலம் முதன் முதலாக இம்மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டத்தில் உள்ள பள்ளிப்பட்டிக் கிராமத்தில் வேளாண்மை அடிப்படையிலான தொழில்களைக் கொண்டு ஒரு தொழில் வளாகம் தொடங்க பூர்வாங்க வேலைகள் நடக்கின்றன. இதற்காக ரூ.7 கோடி மதிப்பீட்டில் 400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

**சுய வேலைவாய்ப்புத் திட்டம்:**

படித்த இளைஞர்களிடையே நிலவும் வேலை இல்லாத் திட்டத்தைப் போக்கிட இந்தியப் பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம் இம்மாவட்டத்தில் சீரிய முறையில் அமல் படுத்தப்பட்டு வருகிறது. 18 வயதுக்கு மேற்பட்டு 35 வயதிற்குட்பட்ட 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற படித்த வேலையில்லாதவர்கள் பயன்பெறும் வகையில், உற்பத்தித் தொழில், சேவைத் தொழில் மற்றும் வியாபாரம் செய்வதற்கு முறையே ரூ.35,000, 25,000, 15,000 பத்து சதவிகித வட்டி விகிதத்தில் 25 சதவிகித மானியத்துடன் கடன் பெற தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இம்மாவட்டத் தொழில் மையம் பரிந்துரை செய்து பெற்றுத் தருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு, 542 நபர்களுக்கு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு, 400 பேர் பயனடைய உள்ளார்கள்.

**தொழில் முனைவோர் பயிற்சி**

மகளிர் முன்னேற்றத்தைக் கணக்கில் கொண்டு மகளிர்க்கென்று மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி 1991-92-ஆம் ஆண்டில், இம்மாவட்டத் தொழில் மையம் மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகமும் இணைந்து 29 மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்குத் தற்காலிகச் சிறுதொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்து வழங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் உதவிக்கு மனுக்கள் பரிந்துரை செய்யப்பட்டன.

1992-93-ஆம் ஆண்டிற்கு 30 மகளிர்க்கு இதேபோல் பயிற்சியளிக்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தற்போது ஆய்வில் உள்ளன. விரைவில் மேற்படி பயிற்சி தொடங்கப்பட உள்ளது.

இதுபோன்ற எண்ணற்ற உதவிகளைத் தொழில் முனைவோருக்கு அரசு செய்கிறது. மாவட்டத் தொழில் மையம் மூலமாக இவற்றை நன்கு பயன்படுத்தி, நாடு முன்னேற, தொழில் ஆர்வம் உடையோர் முன் வருவார்கள் என்று நம்பப்படுகிறது.

**எம். பிச்சையா**
செய்தி-மக்கள் தொடர்பு அலவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.



முள் நிறைந்த செடியிலேதான் முழு அழகு வாய்ந்த ரோஜா மலர் பூக்கிறது; அதுபோலவே, சொல்லொணாத் துன்பங்களுக்கிடையிலேதான் உண்மை பூத்து மலர்கிறது.

- அண்ணல் காந்தியடிகள்

# விஷச் சாராயத்தால் ஏற்படும் விளைவுகள்



மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய மது ஒழிப்பு நடவடிக்கைகள் நல்ல பயனைத் தந்து வரும் சமயத்தில், சிலர் பொது மக்களின் நலனில் அக்கறையின்றி, கள்ளத்தனமாக இலாப நோக்கம் கருதி, கலப்படம் செய்து தயாரிக்கும் பட்டைச் சாராயத்தின் காரணமாக அதிகமானவர்கள் உயிரிழக்கவும், பார்வை இழக்கவும் நேரிடுகின்றது.

இம்மாதிரியான கலப்படம் செய்யப்பட்ட பட்டைச் சாராய விளைவுகள் பெரும்பாலும் குறைந்த வருமானம் கொண்ட கிராமப் புறங்கள், நகர்ப்புறங்களில் பின் தங்கிய பகுதிகளில் இருக்கும் குடிப் பழக்கம் கொண்ட மக்களிடம் பெண்களைவிட ஆண்களில் அதிகம் ஏற்படுகின்றது.

சில சமயம் நாட்டுப்புற முறையில் சாராயம் காய்ச்சுவதில் ஈடுபடுகின்றவர்கள் அதிக லாபம் பெறும் நோக்கத்துடனும், மற்றும் தவறாகப் போதையை அதிகப்படுத்தும் நினைப்புடனும், மீதைல் சாராயம், வார்னிஸ், குளோரால் ஹைட்ரைட் போன்ற நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனப் பொருள்களைச் சேர்த்து கள்ளச்சாராயம் தயாரித்து, பல உயிர்கள் இறக்கவும், பார்வை இழக்கவும் காரணமாகி விடுகின்றனர்.

இம்மாதிரியாக, தவறான நோக்கத்துடன் நச்சுப்பொருள் சேர்த்து தயாரிக்கப்படும் விஷச் சாராயத்தை உட்கொள்பவர்களுக்கு பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன.

கள்ளச்சாராயத்தில் இருக்கும் நச்சுப் பொருள்களின் தன்மைக்கு ஏற்பவும் அவற்றின் அளவுக்குத் தக்கவாறும், உட்கொள்பவர்களுக்கு, சாதாரண தொந்தரவு முதல் பார்வை இழப்பு, உயிரிழப்பு போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன.

மீதைல் சாராயம் கலந்து தயாரிக்கப்பட்ட விஷச் சாராயம் உட்கொண்டவர்களுக்கு உட்கொண்ட ஒரு மணி முதல் 36 மணி நேரத்திற்குள் தொந்தரவுகள் ஏற்படுகின்றன.

**டாக்டர் ஹாஜி, எம்.ஏ. அலீம், எம்.டி.,**

லேசான விளைவாக, குறைந்த அளவு விஷச் சாராயம் உட்கொண்டவர்களுக்கு அசதி, தலைவலி, குமட்டல், வாந்தி, தலை சுற்றல், வயிற்றுவலி போன்ற தொந்தரவுகள் ஏற்படுகின்றன.

அதிக அளவில் விஷச் சாராயம் அருந்துபவர்களுக்கு, கண் கூசுதல் பார்வைக் கோளாறு, பார்வைக் குறைவு, பார்வை இழப்பு, மூச்சுத் திணறல், பதற்றம், இசுவை, உடல் நீலம் பாய்தல் போன்ற தொந்தரவுகள் ஏற்படும். அதிக அமிலநிலை, மயக்க நிலை, சுவாச நிறுத்தம் போன்ற பாதிப்பு உண்டாகி, இறப்பும் நேரிட்டு விடுகின்றது.

அதிக அளவிலான விஷச் சாராய காரண இறப்புகள் சுவாச இயக்க நிறுத்தம் காரணமாகவே உண்டாகின்றன.

பார்வை நரம்பு, விழித்திரை பாதிக்கப்பட்டு ஏற்படும் பார்வைக் கோளாறும், பார்வை இழப்பும் விஷச் சாராயத்தின் அளவுக்கு ஏற்ப ஏற்படுவது கிடையாது. சிலருக்குச் சிறிது அளவு விஷச் சாராயமே பார்வை இழப்பை உண்டாக்கும்.

விஷச் சாராயம் காரணமாகப் பார்வை இழப்புடன் ஆபத்தான கட்டத்தில் இருந்து உயிர் பிழைப்பவர்கள் நிரந்தரப் பார்வை இழப்புக்கு ஆளாகின்றனர்.

மீதைல் சாராயம் கலந்து தயாரிக்கப்பட்ட விஷச் சாராயம் உட்கொண்டவரின் உடலில் செரிக்கப்பட்டு வெளியிடப்படும் பார்மிக் அமிலம், பார்மால்டிஹைடு என்ற இரசாயனப் பொருள்களே உடலில் தோன்றும் விளைவுகளுக்குக் காரணமாகும். இவ்வாறு வெளிப்படும் பொருள்கள் உடலின் கல்லீரல், கணையம், சிறுநீரகம், நுரையீரல் போன்ற உறுப்புகளின் திசுக்களை அழிப்பதாலும், பார்வை நரம்பு, விழித்திரை போன்ற உறுப்புக்களைப் பாதிப்பதாலும், மற்றும்

உடல் அமில நிலையை அதிகரிப்பதாலும் பலவேறு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

60 முதல் 250 மில்லி லிட்டர் மீதைல் சாராயம் கலந்து விஷச் சாராயம் 24 முதல் 36 மணி நேரத்திற்குள் இறப்பை ஏற்படுத்தி விடும். சில சமயம் மிக குறைந்த அளவு மீதைல் சாராயம் கலந்த விஷச் சாராயம் கூட இறப்பை உண்டாக்கும்.

*சிகிச்சை*

விஷச் சாராயம் அருந்தியவர்களுக்கு உடனடிச் சிகிச்சைகள் அவசியமாகும். உட்கொண்ட இரண்டு மணி நேரத்திற்குள் வாந்தி எடுக்க வைத்து அல்லது இரைப்பையைக் குழாய்கள் மூலம் சுத்தம் செய்து இரைப்பையில் இருக்கும் சாராயத்தை வெளியேற்றி, சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உடலில் அதிகரித்து இருக்கும் அமில நிலையைச் சீர்செய்ய சோடியம் பைகார்பனேட், 1/6 மோலர் லக்டேட் கரைசல்கள் சிரைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

உட்கொண்ட விஷச் சாராயத்தில் இருக்கும் மீதைல் சாராய அளவு இரத்தத்தில் 20 முதல் 50 மில்லி கிராம் இருக்கும்போது அதன் செரிமானத்தைக் கட்டுப்படுத்த எரிசாராயம் ஒரு கிலோ கிராம் உடல் எடைக்கு ஒரு கிராம் என்ற அளவில் 5 சதவிகிதம் சர்க்கரைக் கரைசலில் முதல் கட்டமாக அரை மணி நேரத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும். பின்பு, எரிசாராயம் 7 முதல் 10 கிராம் அளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கொடுக்கப்பட்ட எரிசாராயத்தின் இரத்த அளவை 100 மில்லி கிராம் என்ற நிலையில் வைப்பதன் மூலம் உட்கொண்ட மீதைல் சாராயம் செரிக்கப்படுவதை உடலில் தடை செய்யலாம்.

இரத்தத்தில் இருக்கும் மீதைல் சாராய அளவு 50 மில்லி கிராமுக்கும் அதிகமானால் இரத்தச் சுத்திகரிப்பு முறையில் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பட்டைச் சாராயம் குடிக்கும் பழக்கம் கொண்டவர்கள் அப்

குடிப்பவன், தன் சுதந்திரத்தைத் தானே விற்றுவிடுகிறான்; அடிமையாகிறான்.

- மூதறிஞர் இராஜாஜி.



பழக்கத்தைக் கைவிட வேண்டும். சட்ட விரோதமாகச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்பவர்கள் நாட்டின் நலன் கருதி மக்களின் உயிர் காக்கப்பட வேண்டும் என்ற உன்னத இலட்சியத்துடன் மாற்றுத் தொழில் செய்து வாழ வழி செய்து கொள்ள வேண்டும்.

சென்னையில் 1971 செப்டம்பர் மாதத்தில் மீதைல் சாராயம், வார்னிஷ் கலந்து தயாரிக்கப்பட்ட விஷச் சாராயத்தை உட்கொண்ட 20 பேர் உயிர் இழந்தனர். பலர் பார்வை இழந்தனர். 1976-ஆம் ஆண்டு ஜூலை மாதம் மீதைல் சாராயம் குளோரால் ஹைட்ரேட் கலந்து தயாரிக்கப்பட்ட விஷச் சாராயத்தை அருந்தி சென்னையில் 126 பேர் இறந்தனர்.

1990 பிப்ரவரி மாதத்தில் தஞ்சாவூர், பண்ருட்டிப் பகுதியில் மீதைல் சாராயம் கலந்த விஷச் சாராயம் உட்கொண்ட பலர் இறந்ததும் மற்றும் பலர் பல தொந்தரவுகளுக்கும் ஆளாகவும் நேர்ந்துள்ளது. தற்போது தஞ்சை மாவட்டத்தில் கூட இது போன்ற விஷச் சாராயப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு ஆண்டுதோறும் விஷச் சாராயத்தை, கள்ளத்தனமாகக் காய்ச்சி விற்கப்படும் விஷச் சாராய வியாபாரம் காரணமாக அப்பாவி மக்கள் இறந்தும், பார்வை இழந்தும் வருகின்றனர்.

இந்த நிலை மாற குடிப்பழக்கம் கொண்டவர்களும், சாராயம் காய்ச்சுபவர்களும் அதை விட்டுவிடுவதன் மூலம் இதற்கு ஒரு முற்றுப் புள்ளியை வைக்கலாம்.

எனவே, குடிப்பழக்கம் கொண்டவர்கள் அப்பழக்கங்களில் இருந்து விடுபட முயற்சி எடுத்து, தேவைப்பட்டால் அப்பழக்கங்கள் மாற்றம் பெற மருத்துவர்களை ஆலோசிக்க வேண்டும். மற்றும் குடிசைத் தொழிலாக மேற்கொள்ளப்படும் சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள், வேறு தொழில்கள் செய்ய முற்பட வேண்டும்.

மேலும், விஷச் சாராயம் உட்கொண்டவர்களை உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதன் மூலமும், விஷச் சாராய விபத்துக்கள் பற்றிய செய்திகளை மறைத்துவிடாமல், ஒருவர் பாதிக்கப்பட்டாலும் உடனடியாக மருத்துவர்களையும், காவல் துறையினரையும் அணுகுவதன் மூலமும் பலர் இறப்பதையும், மற்ற தொந்தரவுகளுக்கு ஆளாவதையும் கட்டுப்படுத்தலாம்.

## நிலக்கடலை உற்பத்திக்கு நிதி

தமிழ்நாட்டில் நிலக்கடலை உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1992-93-ஆம் ஆண்டில் ரூ.8 கோடியே 85 இலட்சம் தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்.

தரமான விதை உற்பத்தி செய்ய மானிய உதவியும் சான்றிதழ் பெற்ற விதைகள் உற்பத்திக்கு ரூ.90 இலட்சமும் வழங்கப்படும் என்று மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.



# பாப்பா பாட்டு

சின்ன பாப்பா ஓடிவா
சிங்கார பாப்பா ஓடிவா!
பாட்டு ஒன்னு பாடவா
பாடி நீயும் ஆடவா!
காலை நீயும் எழுந்திரு
கடமை தனைச்செய்திடு
கடவுளைத்தான் தொழுதிரு
கல்வி கற்றுத் தேர்ந்திடு
அம்மா வைநீ வணங்கிடு
அப்பா வுக்குப் பணிந்திடு
குருவை நீயும் மதித்திடு
பெரியோர் புகழ வாழ்ந்திடு

—சு. ஜெயகாந்தம்

## அறிவுச் சுடர்

1. நம் அரசியல் நிர்ணயச் சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது?
   1949
2. இந்தியக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட, குறைந்தபட்ச வயது என்ன?
   35
3. நம் தேசியக் கொடியில் உள்ள அசோக சக்கரத்தின் குறுக்குக் கோடுகள் எவ்வளவு?
   24
4. காந்திஜி முதன்முதல் சத்தியாக்கிரகம் செய்த இடம் எது?
   சம்பரான்

காந்தி-இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு எது?
   1931

வன மகோத்சவத்தை ஆரம்பித்தவர் யார்?
   கே.எம். முன்ஷி

'ஐக்கிய நாடுகள் தினம்' எப்போது?
   அக்டோபர் 24

சர்வதேச நீதிமன்றத்தின் தலைமையிடம் அமைந்துள்ள இடம் எது?
   தி ஹேக்

அவ்வைக்கு நெல்லிக்கனி தந்த அதியமான் ஆண்ட பகுதி எது?
   தர்மபுரி

—டி.எஸ். பாலு
திருவான்மியூர்



## விளையும் பயிர்:

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை, ஹமீதியா மேல்நிலைப் பள்ளியில் + 2 படிக்கும் மாணவன் எஸ்.சையத் அபுதாஹிர். இவர், கிரிக்கெட் விளையாட்டில் சிறந்து விளங்கி, சான்றிதழ் பெற்றவர். இதேபோல நாடகங்களிலும் நடித்துள்ளார். பேச்சுப் போட்டியிலும் வெள்ளி பெற்றுப் பாராட்டுதல்கள் பெற்றுள்ள இவர், தேசிய மாணவர் நலத்திட்டத்தின் மூலம், மதுரை காந்தி கிராமத்தில் சமூக சேவை செய்துள்ளார்.




இந்நூலில் 14 கட்டுரைகள் உள்ளன. இவை மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும். ஒன்றே குலம் ஒருவனே தேவன், எண்ணும் எழுத்தும் கண்ணாகும், இவர்களைப் பற்றி..., தேர்வு வருகிறது, சிறுவர் சோலையிலே, பத்மநாபபுரம் அரண்மனை முதலான கட்டுரைகள் சுவையான பல தகவல்களைத் தருகின்றன. பெரியவர்களும் படித்து மகிழலாம்.

### சத்தியசாயி மகாத்மியம்

**ஆசிரியர்: கவிஞர் சக்தி தேவன்**

**வெளியீடு:**

சக்தி காரியாலயம்
59, இலட்சுமி சாலை குடியிருப்பு,
பாப்ப நாயக்கன் பாளையம்
கோவை - 641 306

பக்கம்: 98 — விலை: ரூ. 15/-

சத்தியசாயி மகாத்மியம்என்றொரு
சந்தத் தமிழின் அவதாரம்
சத்தியசக்தித் தேவரின்கைகள்
கட்டியசங்கத் தமிழாரம்!

பண்ணிசைவெண்பா பலவகைவிருத்தப்
பாடல்கள்எல்லாம் தேனாகும்!
பக்தியில்உருகிப் பாடிடும்உள்ளம்
பார்க்கக்கிடைப்பது வானாகும்!

பக்கம்அனைத்தும் தேவரின்பக்திப்
பரிமளம்நுகர்வீர் பக்தர்களே!
படிக்கும்வரியில் சாயியின்பாதம்
பார்த்தபின்நீங்கள் முக்தர்களே!

—இளந்தேவன்

### நபிகள் பெருமானாரின் வாழ்வும் வாக்கும்

**ஆசிரியர்: தங்கவயல் லோகநாதன்**

**வெளியீடு:**

மணி பதிப்பகம்,
58, சீனிவாசப் பெருமாள்
சன்னதி முதல் தெரு,
சென்னை-14

பக்கம்: 120 — விலை: ரூ. 15/-

நபிகள் நாயகத்தின் வாழ்க்கைச் சித்திரங்களோடு, அவரது அமுத மொழிகளும் இந்நூலில் அடங்கியுள்ளன. மக்கள் மனித நேயத்தோடு வாழ்வதற்கும், அதன் மூலம் சமுதாயம் வளம் பெறுவதற்கும் இந்த மணி மொழிகள் வழிகாட்டும்.

### பத்திரிகைகளுக்கு எழுதிப் புகழ் பெறுவது எப்படி?

**ஆசிரியர்: கே.ஜி.எஃப். பழனிச்சாமி**

**வெளியீடு:**

கவிதா பப்ளிகேஷன்
8, முத்துக் கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்: 80 — விலை: ரூ. 8/-

பத்திரிகைகளில் பெயர் வர ஆசைப்படாதவர் யார்? பெயர் வரவேண்டும் என்பதற்காக எதையாவது எழுதி விடுவதா என்ன? அப்படியானால் எப்படி எழுத வேண்டும்? இதற்கு விளக்கம் தருகிறது. இந்நூல். பத்திரிகைகளுக்குக் கடிதம், துணுக்கு, சிறுகதை, கட்டுரை எழுதுவது பற்றிய விளக்கவுரைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

### அறிவுக்கு விருந்து

**ஆசிரியர்: பி.வி. கிரி**

**வெளியீடு:**

காண்டீபம்,
306, லாயிட்சு சாலை,
சென்னை-14.

பக்கம்: 100 — விலை: ரூ. 12/-

### பெண்களைப் பற்றிய பழமொழிகள்

**ஆசிரியர்:**

முனைவர் சரளா இராசகோபாலன்

**வெளியீடு:**

ஒளிப்பதிப்பகம்,
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18.

பக்கம்: 128 — விலை: ரூ. 16/-

பழமொழிகள், நாம் படித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல, நாம் பயன்பெறுவதற்கும் அவை உதவுகின்றன.

நம் முன்னோர்கள் தங்கள் அனுபவங்களை அவ்வப்போது சொல்லி வந்தார்கள். மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள். காலப்போக்கில் அவையெல்லாம் பொன்மொழிகளாக, பழமொழிகளாக மக்களிடையே பரவின. அத்தகைய அரிய மொழிகளை அழகுறத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர்.

குழந்தை, மனைவி, தாய், பெண்ணின் பெருமை, மகப்பேறு, பெண்ணடிமை, திருமணம் இப்படிப் பல்வேறு தலைப்புகளில் பழமொழிகள் தொகுக்கப் பட்டுள்ளன.

எல்லாத் திறத்தாரும் படித்துப் பயன் பெறலாம்.

### அண்ணாவின் செல்வாக்கு!

''இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்குச் செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும், எழுத்துவன்மையும் இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

''உலக அறிவோடும், அரசியல் உணர்ச்சியோடும், இனவெழுச்சியும், கலை ஆர்வமும், மொழிப்பற்றும், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வண்ணம் கிளர்ந்தெழுந்தன. இந்தப் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் வாலிபர்களையும் தீண்டாமலில்லை. அண்ணாதுரையின் பேச்சிலும் எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒருவிதக் கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது, அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்களும் சூழ்ந்தனர்.

—ப. ஜீவானந்தம்

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

- கூடுதலாக, 80 அமைச்சுப் பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 50 காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு, ஆய்வாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது.

தீய சக்திகளின் கொட்டத்தை அடக்கவும், அவர்களுக்கு ஈடுகொடுக்கவும், தமிழகக் காவல் துறையை நவீனப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்கான மிகப்பெரிய ஒரு திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசிடம் கொடுத்து சுமார் 80 கோடி ரூபாய் நிதி உதவி கேட்டோம். ஆனால், அதில் இதுவரை 10 கோடி ரூபாய் தான் கொடுத்துள்ளனர். மத்திய அரசின் இந்த உதவியோடு, தமிழக அரசின் சொந்த நிதியையும் பயன்படுத்தி, தமிழகக் காவல்துறையை நவீனமாக்கும் நல்ல திட்டம், விரைந்து நிறைவேறி வருகிறது.



காவல்துறையின் பல்வேறு நிலையில் உள்ள, இன்னும் சில குறைபாடுகளை, இந்த அரசு உணர்ந்து இருக்கிறது; உன்னிப்பாகக் கவனித்து, தீர்வு கண்டு கொண்டிருக்கிறது. சமுதாயத்திற்கு அவர்களின் சேவை, வெகுவாகத் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளதால், அந்த எண்ணத்தின் செயல்பாடாகப், பல்வேறு தொடர் நன்மைகளைச் செய்து வருகிறது.

காவல்துறையில் பல்வேறு காலியிடங்கள், சில ஆண்டுகள் வரை நிரப்பப்படாமல் நின்றுவிட்டதை, நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அதற்கு ஒரு பரிகாரமாக, சீருடைப் பணியாளர்களை நியமிப்பதற்கு என்றே, ஒரு சிறப்புத் தேர்வாணைக் குழுவினை, இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

காவல்துறையினரின் வெகுநாளைய கோரிக்கையாக ஒன்றை, என்னிடத்தில் அடிக்கடி சொல்லி வந்தார்கள். ''இரண்டாம் நிலைக் காவலர்களாக, தமிழகத்தில் 47 ஆயிரம் பேர் இருக்கிறோம், பல ஆண்டுகள் பணிபுரிந்தும் முதல் நிலை எங்களுக்கு எட்டவில்லை. ஆகவே, எங்களுக்கு ஒரு வழிவகை செய்யுங்கள்'', எனக் கோரி வந்தார்கள். அவர்களின் கோரிக்கைக்குத் தீர்வு காணும் வகையில், இன்றைய தினம், ஒரு நல்ல முடிவை அறிவிக்க விரும்புகிறேன்.

47 ஆயிரம் இரண்டாம் நிலைக் காவலர்களில், 21 ஆயிரம் பேரை, முதல் நிலைக் காவலர்களாக, படிப்படியாகப் பதவி உயர்த்துவது என்றும்; அதே போல, முதல் நிலைக் காவலரிலிருந்து, தலைமைக் காவலராக, 2,700 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்படுவது என்றும், முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியை, இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

முதல் கட்டமாக, இந்த ஆண்டில், 9 ஆயிரம் இரண்டாம் நிலைக் காவலர்கள், முதல்நிலைக் காவலர்களாக ஆக்கப்படுவார்கள்; 500 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாக ஆக்கப்படுவார்கள். எஞ்சிய அனைவரும், 5 ஆண்டுக் காலத்திற்குள், முதல் நிலைக் காவலராகவும், தலைமைக் காவலராகவும், பதவி உயர்வு பெறுவர், என்பதுதான் இவ்வினிய நிகழ்ச்சியை ஒட்டி, நான் எடுத்துள்ள மகிழ்ச்சியான முடிவு, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, இனிமேல், முதல்நிலைக் காவலர்கள், நேரடியாக நியமிக்கப்படமாட்டார்கள் என்பதையும், அவை இரண்டாம் நிலைக் காவலர்களிடமிருந்து, பதவி உயர்வு மூலமே நிரப்பப்படும் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப் பல்வேறு வகையில், அரசு, உங்களைக் கவனித்துக் கொள்ளத் தயாராக இருப்பதால், மக்களைக் கவனித்துக் கொள்ள, நீங்கள் உங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். இன்றைய சூழ்நிலைக்கேற்ப, பிரச்சினைகளை நீங்கள் அணுக வேண்டும். எதிர்வரும் சவால்களைச் சந்திப்பதற்கு, வேண்டிய அமைப்புக்களை

யும், சீர்திருத்தங்களையும் செய்து கொள்ளும் சாத்தியக்கூறுகளை, எங்களது கவனத்துக்குக் கொண்டு வாருங்கள். குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பாது பார்த்துக் கொள்வதோடு, நிரபராதி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில், நீங்கள் மிகுந்த கவனம் கொள்ள வேண்டும். காவல்துறையில் உள்ளவர்கள், நல்லவர்களாக, வல்லவர்களாக, மனித நேயத்தோடு மக்களை அணுகி காவல்துறை, ஒரு Force என்பதைவிட, ஒரு Service என்ற கண்ணோட்டத்தோடு இயங்க வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் பணி, சமுதாயத்திற்குப் போதுமான அளவு, உரிய நேரத்தில், தொடர்ந்து, நியாயமான முறையில் கிடைக்க வேண்டும், என்ற என் விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை அலுவலர்களுக்கும், தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கும், சிறைத்துறை அலுவலர்களுக்கும், ஊர்க்காவல் படையினருக்கும், அவர்கள், தங்களது உயிரினைத் துச்சமாக மதித்து, உயரிய சாதனை படைத்த மக்கள் பாதுகாப்புப் பணியினை பாராட்டி, தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதக்கங்கள் பெற்றுப் பாராட்டப்படும் சீருடை அலுவலர்களுக்கு, என் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும், வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் மகத்தான ஆதரவோடு, உங்கள் சகோதரியின் தலைமையில் இந்த ஆட்சி கடந்த ஆண்டு அமைந்த பிறகு, முதன் முறையாக முதலமைச்சராக, இன்றுதான் திருச்சி மாநகரத்திற்கு வந்துள்ளேன். திருச்சி மாநகர மக்கள், எனக்கு அளித்த அன்பான வரவேற்பு, என் நெஞ்சை நெகிழ வைத்தது. முதலமைச்சராக நான் பொறுப்பேற்ற பின், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் செல்கின்றபோது, அந்த மாவட்ட மக்களைச் சந்திக்க நான் வெறும் கையோடு செல்வது இல்லை.

இதுவரை நான் சென்ற மாவட்டங்களுக்கு எல்லாம், பலகோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு திட்டங்களைக் கொண்டு சென்று, அந்த மாவட்ட மக்களின், குறிப்பாக ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரம் உயர, ஏராளமான நலத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி அவற்றைத் துவக்கியுள்ளேன்; உடனடி நிவாரணமாகப் பல கோடி ரூபாய் அளவிலான உதவிகளை, அரசின் சார்பில் வழங்கியுள்ளேன். ஆனால், இன்று திருச்சியில் நடைபெறுவது, காவல்துறையினருக்குப் பதக்கம் வழங்கி, அவர்களைக் கௌரவிக்கும் விழா என்பதால், இந்த விழாவிற்கென்று கடைப்பிடிக்க வேண்டிய சில பிரத்தியேக மரபுகள் உள்ளதால், வேறு நிகழ்ச்சிகளை இவ்விழாவில் இணைக்க முடியாமல் போய்விட்டது.

அதனால்தான், என் பாசத்திற்குரிய திருச்சி மாவட்ட மக்களுக்காக அரசின் ஏராளமான நலத்திட்டங்கள், மற்றும் பல கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் தயாராக இருந்தும் கூட, இவ்விழாவில் அவற்றை அறிவிப்பது, இந்த நிகழ்ச்சிக்குப் பொருத்தமாக அமையாது என்பதால் தான், அவைகள் இணைக்கப்படவில்லை. இதற்கு என்றே, திருச்சி மாவட்டத்தில் வேறு ஒரு நகரத்தில், அரசு விழா ஒன்று விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என்பதையும், அந்த விழாவில் நான் கைநிறைய நலத் திட்டங்களோடும், உதவிகளோடும் உங்களைச் சந்திப்பேன் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழகம் தலைசிறந்த மாநிலமாக விளங்க, அமைதிப் பூங்காவாய்த் திகழ, ஒருமைப்பாட்டின் உறைவிடமாய்ப் புகழ்பெற, தமிழக மக்களின் பாதுகாப்பிற்காகவும், நலனுக்காகவும், உயர்விற்காகவும், மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளிலும், நாம் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். •

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

சென்னையிலுள்ள தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 3 விடுமுறை இல்லங்களையும், ஒரு ஓய்வு இல்லத்தையும் தனது செயல்பாட்டின்கீழ் நடத்தி வருகிறது.

இந்த வாரியம் ஜூலை 1992-ல் மட்டும் கண்பார்வை பாதிக்கப்பட்ட 220 தொழிலாளர்களுக்கு, மூக்குக் கண்ணாடிகள் வழங்கியிருக்கிறது. மற்றும் 14 தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,845 செலவில் மாதாந்திரப் பயிற்றுவிப்பு, தேர்வு கட்டணம் கட்ட உதவி புரிந்திருக்கிறது. இவை தவிர 74 தொழிலாளர் குடும்பங்களுக்கு, இறுதிச் சடங்குச் செலவுகளுக்காக ரூ.22,200 தொகை வழங்கப்பட்டது.

# பெரியார் மாவட்டம் ஈரோட்டில் புனரமைக்கப்பட்ட வ.உ. சிதம்பரனார் பூங்கா மற்றும் உயிரியல் பூங்கா திறப்பு விழா

பெரியார் மாவட்டம் ஈரோட்டில் பேச்சிப்பாறை என்றழைக்கப்பட்ட இடத்தில் அமைந்துள்ள வ.உ. சிதம்பரனார் பூங்கா 1927-ஆம் ஆண்டு சென்னை மாநில ஆளுநராக இருந்த விஸ்கவுண்ட் கோஷன் பிரபு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1933-ஆம் ஆண்டு இந்தப் பூங்காவினுள் ஒரு மிருகக்காட்சி சாலை ஏற்படுத்தப்பட்டது. 28 ஏக்கர் 24,857 சதுர அடி நிலத்தில் அமைந்துள்ளது இந்த வ.உ. சிதம்பரனார்நகராட்சிப் பூங்கா.

இப்பூங்காவின் அழகு, அமைப்பு சிறப்பு ஆகியவற்றைக் கட்டிக் காக்கவும், மேம்படுத்தவும் 1988-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தால் இப்பூங்காவினைப் புனரமைக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக இப்பூங்காவினைச் சீரமைக்கக் கடுமையான முயற்சிகள் தற் சமயம் எடுக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த ஊக்கத்தின் பேரில் இப்பூங்கா புனரமைப்புப் பணிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. மாணிக்கம் வேண்டுகோளுக்கிணங்க பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மாவட்ட வன அலுவலர் ஒத்துழைப்புடன் ஈரோடு நகராட்சி ஆணையர் திரு. பி. சங்கரன் மற்றும் நகராட்சி அலுவலர்களால் இப்பூங்காவினைச் சீரமைக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. முதல் கட்டமாகப் பூங்காவைப் பராமரிக்க சுமார் 8.00 ஏக்கரைச் சுற்றி வளைக் கம்பிகள் அமைக்கும் பணி ரூ.4 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, பூங்காவைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டது.

பூங்காவினை அழகுபடுத்தும் வகையில் பூங்காவில் உள்ள நடைபாதைகள் சீர் செய்தல், வண்ணம் பூசுதல், அலங்கார விளக்குகள் அமைத்தல், அலங்கார நீரூற்றுகள் அமைத்தல், சிலைகள் புதுப்பித்தல், புல்தரைகள் அமைத்தல், புதுவிதமான செடிகள் வைத்தல், நீர்த் தேக்கங்களைப் பராமரித்தல் முதலான பணிகள் ரூ.3.50 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் கருத்தின்பேரில், மாவட்ட வன அலுவலர் அவர்கள் உதவியுடன் பூங்காவினுள் இயற்கைச்சூழ் நிலையில் பறவைகள், மிருககாட்சி சாலை அமைக்கும் பணி சுமார் ரூ.5 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள மான் கூண்டு, மயில் கூண்டு, மிருகங்கள் கூண்டு ஆகியவை புதுப்பித்தல் பணிகள் நடைபெற்றுள்ளன. இக்காட்சிச் சாலைக்குத் தேவையான சிறுத்தைகள், கரடிகள், குரங்குகள், முயல்கள், மான்கள், விதவிதமான பறவைகள் மற்றும் நீர்ப்பறவைகள் முதலானவை சென்னை வண்டலூர் மிருககாட்சிசாலையிலிருந்து பெறப்பட்டுள்ளன.

ஏற்கெனவே அமைக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வந்த சிறுவர்கள் இரயில் புதுப்பிக்கப்பட்டு இரயில் என்ஜின் புதியதாக வாங்கிப் பொருத்தப்பட்டு, இந்த இரயிலை மீண்டும் சிறுவர்களின் உல்லாசப் பயணத்திற்கு விடப்பட்டுள்ளது. அதி நவீன அலங்கார மின் விளக்குகள் மற்றும் மியூசிகல் பௌண்டன், செடியிலேயே இந்திய தேசிய வரைபடம் போன்ற பல சிறப்பான அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. ஈரோடு நகர் மக்கள் மட்டுமன்றி பெரியார் மாவட்டத்தில் பல பாகங்களில் இருந்து வரும் பொதுமக்கள் தங்கள் குடும்பத்துடன் கண்டுகளிக்க இப்பூங்கா ஓர் சுற்றுலா மையமாக அமைந்துள்ளது.

இத்தகைய சிறப்புகள் பெற்ற ஈரோடு நகராட்சியின் புனரமைக்கப்பட்ட வ.உ. சி பூங்காவினையும்,





# சிவகாசி விபத்து: மாண்புமிகு முதல்வர் உதவி



அண்மையில், சிவகாசியில் உள்ள தனியார் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்டுச் சிலர் உயிரிழக்கக் காரணமான தீ விபத்து பற்றி - அன்றையதினமே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெளியிட்ட அறிக்கை விவரம் வருமாறு:

சிவகாசி அருகில் உள்ள நாராயணபுரத்தில் 14.9.92 அன்று மாலை, தனியார் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் மரணம் அடைந்ததையும், 30 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதையும் அறிந்து, நான் மிகுந்த துயரமும், வருத்தமும் அடைந்தேன். காமராசர் மாவட்ட அதிகாரிகளையும், காவல்துறை மற்றும் தீ அணைப்புத்துறை அதிகாரிகளையும் உடனடியாக விபத்து நடந்த இடத்திற்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட வேண்டுமென்று பணித்துள்ளேன்.

விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்தவர்களின் குடும்பத்திற்குத் தலா ரூபாய் 10 ஆயிரம் வீதமும் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோருக்கு ரூபாய் 5 ஆயிரமும், காயமுற்ற மற்றவர்களுக்கு ரூபாய் 2,500-ம் முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக உடனடியாக வழங்க வேண்டுமென ஆணையிட்டுள்ளேன்.

மேலும், நிவாரணப் பணிகளைக் கவனிப்பதற்காக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்களையும், வருவாய் நிர்வாக ஆணையர், திரு. சி.என். ராமதாஸ் அவர்களையும் உடனடியாக விபத்து நடந்த இடத்திற்குச் செல்லும்படி ஆணையிட்டுள்ளேன். மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

உயிரியல் பூங்காவினையும் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் 22.8.92 அன்று ஈரோட்டில் திறந்து வைத்தார்.

இவ்விழாவினையொட்டி ஈரோடு நகரின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்திடவும், ஈரோடு நகரினைப் பசுமையாக்கிடும் வகையிலும் 15 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

''பெரியார் நகர் பூங்கா' அமைப்பதற்கான அடிக்கல்லையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாட்டி வைத்ததோடு சிறுசேமிப்புப் பரிசுக் குலுக்கலில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசுகளையும், ஈரோடு நகராட்சியின் துப்புரவுப் பணியாளர்கள் 505 பேர்களுக்கு ரூ.1.44 இலட்சம் மதிப்பீட்டிலான இலவச மழைக்கோட்டுகளையும் சிறுதொழில் மேம்பாட்டிற்காக 41 நபர்களுக்கு ரூ.2.65 இலட்சம் கடன் உதவிகளையும் மற்றும் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

'யுனிசெப்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட வீடியோ விளம்பர வாகனத்தையும், பெரியார் மாவட்டத்திற்காக 'யுனிசெப்' நிறுவனத்திடமிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார். இவ்வீடியோ விளம்பர வாகனத்தின் மதிப்பு ரூ.8 இலட்சமாகும். தமிழ்நாட்டிலேயே இவ்வாகனத்தை முதன்முதலாகப் பெரியார் மாவட்டத்திற்குத் தான் 'யுனிசெப்' நிறுவனம் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விழாவிற்குப் பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்றார். திருச்செங்கோடு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே.எஸ். சௌந்தரம், ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வே. பெரியசாமி, மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. சி.கே. காந்திராஜன், டாக்டர் எல்.எம். இராமகிருஷ்ணன், எஸ்.கே. மயில்சாமி கவுண்டர், 'யுனிசெப்' நிறுவனத்தின் சார்பில் திருமதி சரளா ராவ் மற்றும் அரசு அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. எஸ்.என். பழனிச்சாமி விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்க ஈரோடு நகராட்சி ஆணையாளர் திரு. பி. சங்கரன் நன்றியுரையாற்றினார்.

எஸ். நாகராசன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்



**உயிரைக் குடிக்கும் மதுவைக் குடிக்காதீர்!**

# பாடநூல் நிறுவனத்தின் பயனுள்ள பணிகள்!

தமிழ்நாட்டுக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டி, தமிழ்க் கல்விக்கு முக்கியத்துவம் தந்து 'இரு மொழிக் கொள்கை' இலட்சியம் தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தொடக்கக் கல்வி முதல் தமிழைப் பயிற்று மொழியாக்கவேண்டும். நர்சரிப் பள்ளிகளில் ''மம்மி, டாடி'' தான் சொல்லித் தரப்படுகிறது. அன்னை தந்த பால் ஒழுக, அமுதவாய்த் தேனொழுக ''அம்மா'' என்று சொல்ல முடியவில்லை. ஆரம்ப நிலையிலேயே தமிழ் அழிக்கப்படுகிறது; மறைக்கப்படுகிறது. இதனையெல்லாம் கண்டு மனம் குமுறிய நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ''எங்கும் தமிழ் - எதிலும் தமிழ்'' என்று வீரக்குரலை ஒலித்திருக்கிறார்கள்.

இதற்கு, இந்த அரிய முயற்சிகளுக்கு வழிகாட்டுவதிலும்; வழிநடத்துவதிலும் அறிஞர்களும், புலவர் பெருமக்களும், ஆசிரியர் பெருமக்களும், தனியார் கல்வி நிறுவனங்களை நடத்தும் தலைமையாளர்களும் உறுதுணையாக இருப்பது அவசியம்.

டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில்தான் தொடக்கக் கல்வி முதல், தமிழ் கட்டாயம் என்ற நல்ல நிலை ஏற்பட்டுள்ளது. இது மகிழத் தக்க நிலை; தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்துள்ள ஏற்றமிகு நிலை.

மற்றோர் நிலைமையையும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூர்ந்து கவனித்துச் சீர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார். அது - மாணவர்கள் பள்ளிகளை விட்டுப் பெருமளவில் இடையில் நின்று விடுவதைத் தவிர்க்க உரிய முயற்சிகள் காண்பதில் முனைப்புக் காட்டிவருவதேயாகும்.

ஈ.வெ.கி. சுலோச்சனா சம்பத்
தலைவர், த.நா.பாடநூல் நிறுவனம்

**உண்மை வாரிசு**

மறைந்த மனிதப் புனிதர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், தாம் குழந்தைப் பருவத்தில் வறுமை வயப்பட்டு, கல்வி பெறும் வாய்ப்பை இழந்ததைப் பெரும் குறையாக எண்ணி,வருந்தி - இத்தகைய நிலை சமுதாயத்தில் எந்தக் குழந்தைக்கும் ஏற்படக்கூடாது என்பதால் தான் ''இலவச மதிய சத்துணவுத் திட்டத்தை'' மெத்தப் பாடுபட்டு அமல்படுத்தினார்; அரசில் நிதியாதாரம் இல்லையென்றாலும், ''இது அவசியம்- என்னால் முடியும்'' என்று நிலைநாட்டிக் காட்டினார். இன்றளவும், அவரது உண்மை வாரிசு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களால், செம்மையாகவும் சிறப்பாகவும் இது நடத்தப்படுகிறது. இனி அவர்களது ஆலோசனையின் பேரில், தனியொரு துறையையே இதற்காக ஏற்படுத்தப்பட்டுச் செயல்படுத்தப்படவும் இருக்கிறது.



★ ஒரு நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானாலும், அவரவர்கள் நாகரிகம் பெற்று உயர்ந்த நல்வாழ்க்கை நடத்த வேண்டுமானாலும், அரசியல், பொருளியல், தொழிலியல் ஆகிய துறைகளில் தகுந்த ஞானம் பெற வேண்டுமானாலும் அந்நாட்டு மக்களுக்கு முதலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

இலவச மதிய உணவுத் திட்டம்.
இலவசப் பாடநூல் வழங்கல்,
இலவசச் சீருடைத் திட்டம்,
இலவசக் காலணிகள் வழங்கல்,
இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்.

இப்படி எண்ணற்ற முறைகளில், வழிகளில் இளம் சந்ததியினரைக் கல்வி கற்க வைத்திடும் பெரு முயற்சியில், புரட்சித் தலைவர் அரசின் இலட்சிய வழியில், புரட்சித் தலைவியின் பொற்கால அரசும் முனைப்புக் காட்டி வருகிறது.

இந்த இலவசத் திட்டங்களால் தமிழகத்தில் 62.09 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

கல்விப் புரட்சியை முழு வீச்சோடு நிகழ்த்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மிகச் சிறந்த வழிகாட்டுதலோடு செயற்படுகிற கல்வித் துறையில், அதன் துணை அமைப்பாகிய ''தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்'' சமூகக் கண்ணோட்டத்துடன், எதிர்காலச் சந்ததியினரை ஏற்றமுடன் உருவாக்கித் தருவதில், அடிப்படையான பாடநூல்களைத் தரமாகத் தயாரித்து வழங்குவதில் தனி அக்கறை கொண்டு விளங்கிவருகிறது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் ஆளுநர் குழுவின் ஆளுகையின் கீழ்ச் செயல்படுகிறது. இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரே தற்பொழுது இக்குழுவின் தலைவரும் ஆவார். ஆளுநர் குழுவின் கீழ் - நிதிக்குழு, செயற்குழு, மற்றும் கல்விக்குழு ஆகியவை இந்நிறுவனத்தின் நிர்வாகத்தில் செயல்படுகின்றன. நிறுவன அச்சுப்பணிகளுக்கு ஆலோசனை கூற அச்சு சிறப்புக்குழு செயல்படுகிறது. நிறுவனத்தின் வட்டார அலுவலகங்கள் தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை, கும்பகோணம், சேலம், திருநெல்வேலி,

திருச்சி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், புதுக்கோட்டை, ஈரோடு, மானா மதுரை, கோவில்பட்டி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 14 இடங்களில் செயல்படுகின்றன. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரே இந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலரும் ஆவார்.

**தோற்றமும் தொண்டும்**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள் நாட்டுடைமையாக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த 4.3.1970 அன்று இந்நிறுவனம் உருவாக்கப்பட்டது. 1 முதல் 12 வகுப்புகளுக்கான தமிழ் வழிப் பாடநூல்களையும், 6 முதல் 12 வகுப்புகளுக்கான ஆங்கில வழிப் பாடநூல்களையும், 1 முதல் 10 வகுப்புகளுக்கான மலையாளம், கன்னடம், உருது மற்றும் தெலுங்கு வழி சிறுபான்மை வழிப் பாடநூல்களையும் அச்சிட்டு விநியோகித்து வருகிறது. இது தவிர நடுவண் அரசு அளித்துள்ள ரூபாய் ஒரு கோடியினைக் கொண்டு தமிழ் வழியில் கல்லூரி நூல்கள் 911 தலைப்புகளில் அச்சிட்டு வெளியிடும் பணியையும் மேற்கொண்டிருந்தது.

1979-ஆம் ஆண்டு முதல் நடுவண் அரசு அளிக்கும் சலுகை விலைத் தாளின் மூலம் மலிவு விலைக் குறிப்பேடுகள் தயாரித்து மாணவ, மாணவியருக்குக் கிடைக்கும் வண்ணம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிறுவனம் இலாபம் ஈட்டும் நோக்குடன் அமைக்கப்பட்டதன்று. இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் பொதுக் கல்வி இயக்கக வளாகத்தில் இயங்கி வருகிறது.

அதன் பணியாளர் - அலுவலர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி பண்டிகைக்கு முன் 20 சதவிகித அன்புக்கொடை வழங்கப் பெறுகிறது. இந்நிறுவனத்திற்குப் பள்ளிப் பாடநூல், குறிப்பேடு, மற்றும் தாள் ஆகியவற்றை இருப்பு வைக்கத் தரமணியில் சுமார், 1,20,000 சதுரஅடிப் பரப்பில் ஆறு கிடங்குகள் உள்ளன.

**பாடநூல் தயாரிப்பு அச்சுப்பணி**

''பாடநூல் தயாரிப்பு'' என்பது எளிதான காரியமல்ல; மிகப் பொறுப்பான கலை; பொன்னான எதிர்காலத்தை ஏற்படுத்தித்தருவது, இதில் இந்நிறுவனம் வெற்றி கண்டு வருகிறது.



டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு தயாரித்தளித்த கலைத்திட்ட நெறிமுறைகளின்படி இந்நிறுவனம் 1988-89-ஆம் ஆண்டில் 1,3 மற்றும் 6-ஆம் வகுப்புகளுக்கும், 1989-90-ஆம் ஆண்டில் 2,4,7,9 மற்றும் 11-ஆம் வகுப்புகளுக்கும் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகளில் - (தெலுங்கு, உருது, மலையாளம், கன்னடம்) 254 தலைப்புகளில் புதிய வரிசைப் பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் கையேடுகளை வெளியிட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டிற்கு மூன்றாவது கட்டமாக 5,8,10 மற்றும் 12 ஆகிய வகுப்புகளுக்கு 115 (தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகளில்) தலைப்புகளில் புதிய வரிசைப் பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் கையேடுகள் வெளியிடப்பட்டன. புதிய கல்விக் கொள்கையைப் புத்துணர்வுடன் நிறைவேற்றிக் காட்டுவதில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சி, பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்தியாவில் புதிய கல்விக் கொள்கைக்கிணங்க புதிய வரிசைப் பாடநூல்களை முதலில் வெளியிட்டு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் முன்னணியில் உள்ளது. வாழ்க்கைக் கல்வி, கலைக் கல்வி 1 முதல் 5-ஆம் வகுப்புவரை பாடநூல்/செயல்முறைச் சுவடிகளும், உடற்கல்வி/சுகாதாரக் கல்விக்கு 1 முதல் 10 வகுப்பு வரை ஆசிரியர் கையேடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளுக்குக் கணிப்பொறி அறிவியல் என்ற பாடநூலும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாடநூல்களின் அச்சுப் பணிக்காகவும் அச்சுத் தொடர்பான பல்வேறு பணிகளுக்காகவும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, கூலி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டு அச்சுக் கூலி விகிதங்களுக்கு அரசின் ஒப்புதல் பெறப்படுகிறது. பாடநூல்கள் ஏறத்தாழ 150 தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றன.

பாடநூல்களை அச்சிட முதல் தவணையாக 500 டன் தாள் பெற தமிழ்நாடு தாள் ஆலைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராகிய நான் தமிழ்நாடு தாள் ஆலைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களை மூன்று முறை நேரில்




புகை உடலுக்குப் பகை. *1990*-களில் தொழில்துறையில் சிகரெட் பிடிப்பதால் இறப்பவர்களின் எண்ணிக்கை *2.1* கோடியாக இருக்குமென்று அமெரிக்க புற்றுநோய் கழகச் செய்தி தெரிவிக்கிறது.

வளரும் நாடுகளில் புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. புகை பிடிப்பதால் அமெரிக்காவில் ஆண்டுதோறும் *4,34,000* பேர் இறக்கின்றனர். புகையால் இறப்பவர் ஒருபுறமிருக்க, புகைவிடுபவர்களின் புகையைச் சுவாசித்து இறப்பவர்கள் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது.

அமெரிக்காவில் வாரந்தோறும் இதனால் *1,000* பேர் இறக்கின்றனர்.

---

சந்தித்து வாதாடி டன் ஒன்றுக்கு ரூ.*2.250* வீதம் சிறப்புத் தள்ளுபடி பெற்றதன் மூலம் இந்நிறுவனத்திற்கு *1993-94*-ஆம் கல்வியாண்டில் மட்டும் ரூ.*82.50* இலட்சம் ஆதாயம் கிட்டியது. தாள் கொள்முதலில் இடைவிடாத பேச்சுவார்த்தை மூலம் ஒரே ஆண்டில் இவ்வளவு பெரிய தொகை நிறுவனத்திற்கு ஆதாயமாகக் கிட்டுவதற்குப் பெருமைப்படுகிறேன். மேலட்டை, சிப்பத்தாள் ஆகியன தனியார் நிறுவனத்திடமிருந்து செய்தித்தாளில் விளம்பரம் செய்து ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று ஆளுநர் குழுவின் அங்கீகாரத்திற்குப் பின் வாங்கப்படுகிறது.

**பாடநூல் விநியோகம்**

*1992-93*-ஆம் கல்வியாண்டிற்கு விற்பனை மற்றும் இலவச வெளியீடு விநியோக விவரம்:-

விநியோகிக்கப்பட்ட பாடநூல்களின் மொத்த எண்ணிக்கை ..*530* இலட்சம்

பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை .. *120* இலட்சம்

அச்சிடப்பட்ட நூல்களின் மொத்த மதிப்பு ..*2,851* இலட்சம்

தமிழ்நாடு அரசு இலவச வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட மொத்த நூல்களின் எண்ணிக்கை .. *364* இலட்சம்

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை .. *62.6* இலட்சம்

இலவச வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட நூல்களின் மொத்த மதிப்பு ..*1,851* இலட்சம்

**குறிப்பேடு**

பாடநூல் எப்படியோ, அதற்கு ஆதாரமாகக் குறிப்பேடுகளும் மிக முக்கியம். அது தரமான காகிதத்தில், மலிவான விலையில் தரப்படும் என்பதில் இந்நிறுவனம் கவனமாகச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பேடுகள் தயார் செய்து வழங்கும் பொறுப்பை *1.10.1979* முதல் இந்நிறுவனம் ஏற்றுள்ளது. இக்குறிப்பேடுகள் நடுவண் அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும் சலுகை விலைத்தாளினால் தயார் செய்யப்பட்டு மலிவு விலையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர்/பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் பயனடையும் மாணவர்களுக்கு மட்டும் தேவையான குறிப்பேடுகள் தயாரிக்க ஆண்டு ஒன்றுக்குச் சுமார் *1,600* டன் தாள் தேவைப்படுகிறது.

*1.4.1990* முதல் நடுவண் அரசு சலுகை விலைத்தாள் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டதால் குறிப்பேடு தயாரிக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பெறவில்லை.

சென்ற ஆண்டு தயாரிக்கப்பட்டு கையிருப்பில் இருந்த குறிப்பேடுகளில் இருந்து *1992-93*-ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிட நலப் பள்ளிகளுக்குத் தேவையான குறிப்பேடுகள் ரூ.*42* இலட்சத்திற்கு வழங்கப்பட்டு விட்டது. கையிருப்பில் உள்ள மீதிக் குறிப்பேடுகள் அனைத்துப் பொதுப் பள்ளிகளிலும் பயிலும் ஆதிதிராவிட மாணவருக்கு விநியோகிக்கத் தேவையான அளவு இல்லாததால், இந்துஸ்தான் தாள் ஆலை நிறுவனத்திடமிருந்து தாள் வாங்கி குறிப்பேடு தயாரித்துப் புதிய விலையில் விநியோகம் செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. காகித ஆலையிலிருந்து தாளினைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நிதி நிலைமை**

கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் இலாப நோக்குப் பார்க்கக் கூடாது. சேவை மனப்பான்மையே வேண்டும் என்பது முதல்வர் புரட்சித் தலைவியின் எண்ணம். ஆயினும் நட்டத்திற்கோ, விரயத்திற்கோ, இடம் தராது இந்நிறுவனம் செவ்வனே சாதனை புரிந்து வருகிறது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் பாடநூல் விநியோகத்தை இலாப நோக்கின்றி செய்து வந்தும், கிடைக்கப் பெற்ற குறைந்த பட்ச சேமிப்பிலிருந்து ரூ.*34* இலட்சம் மதிப்பில் *3* மாடிக் கட்டடம் மற்றும் ரூ.*1.20* கோடி மதிப்பில் *10* மாடிக் கட்டடம் ஆகியவை இந்நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ளது. அக்கட்டடத்திலுள்ள மாநில மற்றும் மைய அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ.*3* இலட்சம் வாடகையாகப் பெறப்படுகிறது.

உபரி நிதியிலிருந்து *1981-82* முதல் *1985-86* வரை ஆண்டு ஒன்றுக்கு ரூ.*25* இலட்சமும் *1986-87*-ஆம் ஆண்டு முதல் ரூ.*50* இலட்சமும் பள்ளிகளில் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்குப் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு மொத்தம் ரூ.*2.25* கோடி அரசாணையின்படி வழங்கப்பட்டுள்ளது.

**சிறப்புகள்**

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சிறப்புகளை நாடறியும். எதிர்காலச் சந்ததிகளை அறிவுபூர்வமாகவும், சமூகக் கண்ணோட்டத்துடனும் உருவாக்குவதில் பாடநூல் நிறுவனம் தனிச்சிறப்பு படைத்து வருகிறது. அதில் ஒரு திருப்புமுனை முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ரூ.*20* கோடி மதிப்பில் இலவசப் பாடநூல் வழங்கும் திட்டம் அமல்படுத்தப் பட்டது ஆகும்.

அந்த உன்னத இலட்சியத்தின் குறிப்பறிந்து, அவர்தம் நோக்கங்களைச் செயலாற்றும் பொருட்டு, அத்தருணத்தில் நான் இந்நிறுவன மேலாண்மை இயக்குநர் பொறுப்

பைப் பெற்றிருந்தது எனது நற்பேறாகும். இத்திட்டத்தை இரண்டு திங்களில் தயாரித்து முடித்து, முதல் ஆண்டிலேயே வெற்றி பெறச்செய்யப் பட்டது; அவ்வெற்றி இன்றளவும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அடியொற்றி அதே வடிவில் தொடர்கிறது.

1992-93-ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு அரசின் இலவசப் பாட நூல் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.1,851 இலட்சம் மதிப்புள்ள ரூ.364 இலட்சம் நூல்கள் , விநியோகிக்கப்பட்டு, 62.6 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். இது அரசின் பெருஞ்சாதனை மட்டுமன்று; இதனை மற்ற மாநில அரசுகளும் பின்பற்றக் கருதினாலும், அவர்களால் இயலுமா என்று மலைக்கச் செய்யும் சாதனையாகும். அவ்வகையில் பிற மாநிலங்களுக்குப் பல வழிகளிலும் வழி காட்டுகிற மாநிலமாகத் தமிழகம் அமைந்துள்ளது; பாட நூல் தயாரிப்பு, இலவசமாக வழங்குதல் ஆகிய பணிகளிலும் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிறது.

அந்த அளவிற்கு எழை எளிய மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து வைக்கும் முயற்சியில் இலவசக் கல்வியோடு இலவசப் பாடநூல் வழங்கும் திட்டமும் இணைந்து பெரும் சாதனை நிகழ்த்தி வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மற்ற அனைத்துத் துறைகளது முன்னேற்றத்திலும் காட்டுகிற அக்கறையிலும் மிக முக்கியமான கல்வி, தொழில், விவசாயத் துறைகளில் பேரார்வம் கொண்டு பெரும் சாதனைகளை நிகழ்த்தி வருகிறார். குறிப்பாகக் கல்வித் துறைக்கு முதலிடம் தந்து, அதிக நிதி ஒதுக்கி தமிழ்நாட்டில் கல்விப் புரட்சியை நிகழ்த்துவதில் முதன்மை பெற்று விளங்குகிறார்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி தலைமையில் ராஜநடை போடும் இந்த அரசின் இப்பொற்காலத்தில் பாடநூல் நிறுவனம் விரிவாக்கப்படவிருக்கிறது. கல்வித்துறையில் பல்லாண்டுகளாக நேரடி அனுபவம் பெற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்பட்டுச் சாதனைகள் பல நிகழ்த்த விருக்கிறது இந்நிறுவனம். தனக்கெனப் பெரிய அச்சகத்தை உருவாக்கிக் கொள்ளவிருக்கிறது. ஊழியர் நலன்களைக் கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களை மேற்கொள்வதுடன் பாடநூல்களின் தரத்தை மேலும் உயர்த்திடவும் ஆர்வம் கொண்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பயனுள்ள பணிகள்**

'தமிழ்ச் சமுதாயத்தின் அறிவு விழி திறக்கக் கல்வி ஒளிபாய வேண்டும்' என்று விரும்பினார் தந்தை பெரியார். 'அனைவரும் கற்க வேண்டும்' என்ற ஆர்வத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் மேற்கொண்ட அறிவார்ந்த முயற்சிகளையும் நாடறியும். இடைக்காலத்தில் கல்வி ஓடையில் முதலைகள் சில தலைதூக்கின. ஆயினும் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் பள்ளிகள், கல்லூரிகள், ஏன் பல்கலைக் கழகங்களும் எண்ணிக்கையில் உயர்ந்தன. கற்போர் எண்ணிக்கை கூடியது. மகளிர் கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. மகளிர்க்கென்று தனியொரு பல்கலைக் கழகமே நிறுவப்பட்டது. அவர் வழிவந்த டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் கல்விப் புரட்சி வியக்கத்தக்க அளவில் மேலோங்கியுள்ளது. அதற்கு உறுதுணைபுரியும் வகையில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும் சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

அடுத்துவரும் ஆண்டுகளில், இந்நிறுவனத்தின் சாதனைகள் மேலும் பல மடங்கு பெருகும். அதற்கான வளர்ச்சிக் கட்டங்கள் அடுத்தடுத்து நிகழவிருக்கின்றன. ஏற்றமிகு எதிர்காலச் சந்ததிகளை உருவாக்கிடும் பயனுள்ள சமுதாயப் பணியில் பாடநூல் நிறுவனம் வியத்தகு சாதனை புரிந்து வருகிறது; மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான வழிகாட்டுதலோடு, இப்பணிகளில் மேலும் விரிவாக்கம் பெற்றுத் தமிழகம் முழுவதும் முழுமையான எழுத்தறிவியக்கம் என்ற ஏற்புடைய கொள்கை வெற்றியடையவும்; பள்ளி மற்றும் கல்லூரிகளில் பண்பான பயனுள்ள கல்வி தரப்பட்டு, பண்பட்ட மாநிலமாகப் ''பகுத்தறிவுபுரியாக''த் தமிழகம், நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் மேலும் பல சரித்திரச் சாதனைகளை நிகழ்த்தும் என்பதில் ஐயமில்லை!

**சுற்றுலாப் பயணத்தின்மூலம் இந்தியாவின் அழகைக் கண்டு களிக்க வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் அந்நியச் செலாவணி பெருகியுள்ளது. இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை சுற்றுலாவின் மூலம் ரூ.1,700 கோடி அன்னியச் செலாவணியாகக் கிடைத்துள்ளது.**

**சென்ற ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கிடைத்த அன்னியச் செலாவணி ரூ.1,085 கோடியாகும்.**



**வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**

**எஸ்.டி. இராஜேந்திரன் திடீர் மறைவு!**

**வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக இருந்து திறம்படச் செயலாற்றிவந்த திரு. எஸ்.டி. இராஜேந்திரன் அவர்கள் 11.9.92 அன்று எதிர்பாரா வண்ணம் மறைவெய்தினார் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.**

**அவரது மனைவி மக்களுக்குத் 'தமிழரசு' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.**

**—ஆசிரியர்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



**கோ-ஆப்டெக்ஸ்**

தமிழ்நாடு கைத்தறி

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

